271

271

1146.

கண்ணன் தமிழ் வாசகம்

9-JAN 193

நான்காம் வகுப்பு



ஜி.வி.கே.ஸாமி & கோ
பப்ளிஷர்ஸ், கும்பகோணம்

கண்ணன்

தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

திருத்திய பதிப்பு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1936
MADRAS

Printed at the
Sri Vidya Power Press,
Kumbakonam.

ஜி. வி. கே. ஸ்வாமி அண் கோ.,
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

பதிப்புரிமை] 1935 [விலை அணா 5

முகவுரை.

எலிமெண்டரி பாடசாலைகளில் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் அவர்களது தாய்ப் பாஷையாகிய தமிழை நல்ல முறைகளில் கற்பிக்க வேண்டியது அவசிய மென்பது எல்லோரும் ஒத்துக் கொள்ளத் தக்கதாகும். அதனால் தமிழ்ப் பாஷையில் நல்லறிவு உண்டாவதற்கு நல்ல முறைகளில் எழுதப்பட்டுள்ள வாசகப் புத்தகங்கள் பல வேண்டும் என்று ஏற்படுகின்றது. இந்த நோக்கத்துடன், 'கண்ணன் வாசகங்கள்' என்ற பெயருடன் வெளியிடப்பட்ட வாசக வரிசையில் **இது நான்காவது** புத்தகமாகும்.

இப்புத்தகம் நான்காவது வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படுமாறு எழுதப்பட்டுள்ளது. இதில் துருவன், இராமதாசர் போன்ற சிறிய கதைகளும், சிறுவர்கள் தினந்தோறும் பார்க்கக்கூடிய ஜீவராசிகள், தாவரங்கள் சம்பந்தமான பாடங்களும், உடல் நூல், சுகாதாரம் இவைகளைப் பற்றிய பாடங்களும் மிகத் தெளிவான நடையில் எழுதப்பட்டுள்ளன. நவீன விஷயங்களைப்பற்றிய மோட்டார், மின்சாரசக்தி போன்ற சில பாடங்களும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பாடத்திற்கும் நல்ல உருவப் படங்கள் தயாரிக்கப்பட்டுச் சரியான விடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் கடைசியிலும் சில முக்கிய வினாக்களும் அப்பியாசங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகத்தில் குறைகளை நீக்கி இதை வெளியிடுவதில் பேருதவி செய்த கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதரான ராஜகோபால பிள்ளை அவர்களுக்கு என்று மறவாத நன்றி பாராட்டுகிறோம்.

இவ்வாசகப் புத்தகங்கள் சிறிய மாணவர்களுக்குத் தமிழ்ப் பாஷையில் அபிமானத்தையும் அறிவையும் உண்டாக்க ஒருவாறு உதவலாம் என்ற நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளன வாதலால், கல்வி இலாகா அதிகாரிகளும் எலிமெண்டரி பாடசாலை மானேஜர்களும் உபாத்தியாயர்களும் தக்க ஆதரவு அளிக்கவேண்டுமென வணக்கத்துடன் வேண்டிக் கொள்ளப் படுகிறார்கள்.

கும்பகோணம்,
10—12—35.

பிரசுர கர்த்தர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1936
MADRAS

பொருளடக்கம்

பாடம்		பக்கம்
1.	துருவன்	... 1
2.	காற்று	... 4
3.	உழைப்புமில்லை உணவுமில்லை	... 8
4.	சாரணீயம்	... 13
5.	அரசனும் மான்களும்	... 17
6.	மோட்டார் வண்டி	... 20
7.	தண்ணீர்	... 25
8.	வௌவால்	... 30
9.	நல்வழி	... 34
10.	குருடர்களுக்கான பள்ளிக்கூடங்கள்	... 36
11.	புளி	... 38
12.	மரத்துக் கிளி	... 42
13.	பிச்சைக்காரர்கள்	... 46
14.	கடிகாரம்	... 50
15.	பொறுப்புள்ள வேலைக்காரன்	... 56
16.	பழமொழிகள்	... 58
17.	சிலந்தி	... 59
18.	கண்	... 63

பாடம்		பக்கம்
19.	பவுண்டு	... 67
20.	நல்லானொருவனுல் நாடு செழிக்கும்	... 70
21.	கடன் வாங்குதல்	... 72
22.	ஜீரணம்	... 75
23.	மின்சார சக்தி	... 78
24.	தீபாவளிப் பண்டிகை	... 83
25.	மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்	... 89
26.	பயிர்த்தொழில்	... 91
27.	இராமதாசர்	... 95

செய்யுள் பகுதி

1.	வெற்றி வேற்கை	... 101
2.	நீதி வெண்பா	... 104
3.	நல்வழி	... 106
4.	பஞ்ச தந்திரம்	... 108

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-JAN 1936
MADRAS

கண்ணன்

தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

1. துருவன்

இராக் காலங்களில் நாம் ஆகாயத்தைப் பார்ப்போமானல் மிகப் பிரகாசத்தோடு விளங்குகின்ற நக்ஷத்திரங்களைக் காண்கிறோமல்லவா! வானத்தில் உள்ள கணக்கற்ற நக்ஷத்திரங்களில் முக்கியமானவை சிலவேயாம். அவற்றுள் துருவ நக்ஷத்திரம் ஒன்ருகும்.

வெகு காலத்திற்கு முன் மதுராபுரி என்ற பட்டணத்தில் உத்தானபாதன் என்ற ஒரு மன்னர் ஆண்டு வந்தார். அவருக்குச் சுநிதி, சுருசி யென இரு மனைவியருண்டு. சுநிதி துருவனையும் சுருசி உத்தமனையும் பெற்ருர்கள். அரசர் சுருசியின் அழகுக்காக அவளிடத்தில் பேரன்பு கொண்டார். ஆதலால் அரசர் அவள் சொற்படி நடந்து வந்தார்; சுநிதியை முற்றும் மறந்தார்.

ஒரு நாள் அரசர் உத்தியான வனத்திலுள்ள மண்டபத்தில் உல்லாசமாக வீற்றிருந்தார். அச் சமயம் சுருசியின் மைந்தன் தன் தாயுடன் அவ்விடம் சென்முன். வந்த மகனை அரசர் மடியில் வைத்துக்கொஞ்சினுர். துருவனும் அங்கு வந்து தன் தந்தையின் மடியில் உட்காரப் போனுன். இதைக் கண்ட சுருசி, " துருவா, சுநிதி வயிற்றில் பிறந்த நீயும் அரசர் மடிமீது உட்கார முடியுமோ? வேண்டுமானுல் என் வயிற்றில் பிறக்க வரம் பெற்று வருவாய்" என்று கூறித் தடுத்துவிட்டாள்.

துருவன் அழுத கண்ணீரோடு தன் தாயிடம் சென்று நடந்ததைக் கூறினுன்; அன்னையிடம் விடை பெற்றுக்கொண்டு கானகத்தை நோக்கிச் சென்முன். வழியில் நாரதர் அச்சிறுவனைக் கண்டார்; அவன் மேல் இரக்கங்கொண்டார்; நாராயண மந்திரத்தை அவனுக்கு உபதேசித்தார்.

அரசிளங்குமாரன் யமுனை நதிக் கரையை அடுத்த வனத்திற்குச் சென்று, நாராயணனைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தான். மஹாவிஷ்ணு அவன் தவத்தைக்கண்டு மகிழ்ந்து, அவன் முன் தோன்றி, " அன்பனே! நீ செய்யும் தவத்திற்கு மெச்சினேன்; உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்றுர்.

துருவன் திருமாலின் பாத கமலங்களில் விழுந்து வணங்கி, "ஐயனே! அன்பர்களுக்கு

இரங்கும் மெய்யனே! நான் யாருமடையாத உயர் பதவியை அடைய வேண்டும்; எக்காலத்தும் உம்மை மறவாதிருக்க வேண்டும்." என்று வேண்டினன். திருமால், "பக்த! நீ விரும்பியவாறு வரம்

கடவுள் துருவனுக்குத் தரிசனம் கொடுத்தல்

தந்தோம்; நீ உன் பெற்ருேரிடம் செல்வாயாக. நீண்ட காலம் அரசு செலுத்திக் கடைசியில் நீ விரும்பியவாறே துருவப்பட்டமாகிய உயர்ந்த பதவியை யடைந்து விளங்குவாய்" என்று அருளி மறைந்தார்.

இதையறிந்த மன்னர் மனங்களித்துக் குதித்தார்; எதிர் சென்று துருவனே அழைத்து வந்தார்; அவனுக்குப் பட்டம் கட்டினர். துருவன் பல

ஆண்டுகள் செங்கோல் செலுத்திக் கடைசியாகத் துருவமண்டல மனுகி, நட்சத்திரமாக இன்றைக்கும் விளங்கி வருகின்ருன்.

கேள்விகள்:—

(1) நக்ஷத்திரங்களில் முக்கியமானது எது? (2) உத்தான பாதனுடைய இரண்டு மனைவியர்கள் யாவர்? (3) அரசர் சுநிதியைக் காட்டிலும் சுருசியிடம் ஏன் அதிக அன்பு வைத்தார்? (4) துருவனை அவனுடைய தந்தையின் மடியில் உட்கார விடாமல் தடுத்தது யார்? ஏன்? (5) நாரதர் துருவனுக்கு என்ன உபதேசம் செய்தார்? (6) அவர் துருவனுக்கு என்ன வரம் கொடுத்தார்? (7) துருவன் எப்படி நக்ஷத்திரமாக மாறினன்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க;—

(1) நக்ஷத்திரங்களில் முக்கியமானது......நக்ஷத்திரம். (2) துருவன் அவனுடைய......யின்... ..உட்காரப்போனன். (3) காட்டில் துருவன்......க் கண்டான். (4) நாரதர்......மந்திரத்தை......செய்தார். (5) அரசர் துருவனுக்குப்......கட்டினர். (6) வானத்தில் நாம் இன்றைக்கும்......க் காணலாம்.

---

2. காற்று

கோடை மாதங்களில் அதிகப் புழுக்கமாக இருக்கையில், நாம் விசிறியினல் வீசி நம் உடம்பில் காற்றுப் படும்படியாகச் செய்து கொள்ளுகிருேம். காற்றை நாம் கண்ணல் காண முடியாது; ஆனல் அதன் செய்கையினல் அது இருக்கிறது என்பதை உணருகிருேம்.

காற்று அடிக்காமலிருக்கும்போது, அதனை நாம் உணரக்கூடவில்லை. வீசியடிக்கும்போது அதை உணருகிறோம். இதிலிருந்து காற்று அடிக்கும்போது தான் இருக்கிறதா? மற்ற நேரங்களில் இல்லையா! என்ற சந்தேகம் உண்டாகின்றது. நாம் இதைச் சற்றுக் கவனிப்போம்.



ஒரு ரப்பர்ப் பந்தை யெடுத்து ஓரிடத்தில் ஒரு ஊசி முனையால் ஒரு சிறு துவாரம் செய்து

அதைத் தண்ணீரில் அமுக்குவோமானால், நீர்ப் பரப்பின் மேல் பல குமிழிகள் கிளம்புவதைக் காணலாம். குமிழிகள் எங்கிருந்து வருகின்றன? துவாரத்தின் வழியாகப் பந்துக்குள் தண்ணீர் செல்லச் செல்ல உள்ளிருக்கும் காற்று கொஞ்சம் கொஞ்சமாக வெளிக் கிளம்புவதனால் குமிழிகள் உண்டாகின்றன. ஆகையால், காற்றானது எப்போதும் எங்கும் வியாபித்திருக்கிறது என்று நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

காற்று சகல விதமான ஜீவப் பிராணிகளுக்கும் செடி கொடிகளுக்கும் அவசியமான வஸ்துவாக இருக்கிறது. ஜீவப் பிராணிகள் மூச்சுவிடுவதனால் காற்று அசுத்தப்படுகிறது. எனெனில், நாம் நல்ல காற்றை உட்கொண்டு, கரியமல வாயு என்ற கெட்ட காற்றை வெளியே விடுகிறோம். செடி கொடிகளாகிய தாவரங்கள் காற்றைச் சுத்தப் படுத்துகின்றன. எப்படியெனில், நாம் வெளியே விட்ட கரியமல வாயுவை அவைகள் உட்கொண்டு நல்ல பிராணவாயுவை வெளியே விடுகின்றன. இக் காரணம் பற்றியே நாம் வீட்டுப் புறங்களில் செடி கொடிகளை வைத்துப்பயிராக்குகிறோம்.

சிலர் தங்களது படுக்கை யறைகளின் ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு நித்திரை செய்கிறார்கள்; நல்ல காற்று அறைக்குள் போகாததால் அங்

குள்ள கெட்ட காற்றையே மறுபடியும் சுவாசித்து அநேக வியாதிகளுக்காளாகிறார்கள். ஆகையால், நாம் திடகாத்திரர்களாக வாழவேண்டுமானால் நல்ல காற்றையே சுவாசிப்பதற்கு வேண்டிய வழிகளைத் தேடிக்கொள்ள வேண்டும்.

மூச்சு விடுவதற்காகவே கடவுள் நமக்கு மூக்கை அளித்திருக்கச் சிலர் அதற்கு மாறாக வாயால் மூச்சுவிடுகிறார்கள். இது மிகவும் கெடுதலானபழக்கம். இதை முழுவதும் விலக்கவேண்டும். மூக்கில் உள்ள உரோமங்கள் வெளியிலிருந்து உள்ளே போகும் காற்றில் உள்ள அழுக்கைப் பிடித்துக் கொள்ளுகின்றன. சுத்தமான காற்று உள்ளே செல்லுகிறது. வாயில் அவ்வித வசதியில்லை. ஆகையால், நாம் மூக்கினாலேயே மூச்சு விடவேண்டும்.

காற்று நமது உயிர் வாழ்க்கைக்கு மிக்க அவசியமானது. நாம் நல்ல காற்றையே உட்கொள்ள வேண்டும்; செடி கொடிகளை வீட்டுப் புறங்களில் வைத்துப் பயிராக்கவேண்டும். வீடுகளில் தாராளமாய்க் காற்று உள்ளே வரவும் வெளியே போகவும் வசதி இருக்க வேண்டும். இவைகள் கைகூடினால் நாம் நோயற்ற வாழ்வு வாழலாம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

கேள்விகள்:—

(1) காற்றை நாம் எப்பொழுது உணர்கிறோம்? (2) நாம் வீட்டுப் புறங்களில் ஏன் செடி கொடிகளை வைத்துப் பயிராக்க வேண்டும்?

(3) ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு ஒரு அறையில் தூங்கினால் நாம் எதற்கு உள்ளாவோம்? ஏன்? (4) நாம் ஏன் மூக்கினாலேயே மூச்சு விட வேண்டும்? (5) நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு அவசியமானவை யாவை?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) நாம்......கண்ணால் காண முடியாது. (2) ஒரு ரப்பர்ப் பந்தைத் தண்ணீரில்......நீர்ப்பரப்பின்மேல் பல...கிளம்புகின்றன. (3) நாம் உட்கொள்ளும் காற்றுக்கு......வாயு என்று பெயர். (5) நாம்... மூச்சுவிட வேண்டும். (6) சிலர்...மூச்சு விடுகின்றனர். (7) இது ஒரு......பழக்கம். (8) நோயற்ற.....குறைவற்ற...... .

---

3. உழைப்புமில்லை உணவுமில்லை

ஓர் ஊரில் கிருஷ்ணன் என்ற ஒரு பையன் மிகவும் சோம்பேறியாக இருந்தான்; பள்ளிக்கூடத்தில் படிப்பது மிகக்கஷ்டமானது என்று நினைத்துப் பள்ளியை விட்டான்; தொழில்செய்து திரவியம் சம்பாதிக்க நினைத்தான்.

ஒரு நாள் தெருவில் ஒருவன் சில பாத்திரங்களை விற்றான். அதைப் பார்த்து, " இத்தொழில் தான் சிறந்தது " என்று சொல்லிக் கொண்டு பாத்திரங்களை விற்கலானான். பிறகு அவன் தெருத் தெருவாய் அலைய வேண்டியதைக் கண்டு, " சீச்சீ! இது என்ன தொழில்! எனக்கு வேண்டாம்; இத்

தொழில்" என்று சொல்லி அதை விட்டு விட்டான்.

கடைத்தெரு வழியாகப் போன கிருஷ்ணன் அங்குள்ள ஒரு தையற்கடையைக்கண்டு, "ஆகா! துணி தைப்பதே நல்ல தொழில். உட்கார்ந்தபடியே செய்யலாம்" என்று சொல்லி அதிலமர்ந்தான். உட்கார்ந்தபடியே வேலை செய்யவேண்டியிருந்த



படியால் அவனுக்கு இடுப்பு வலி ஏற்பட்டது. அதனால் அவன் அவ்வேலையையும் விட்டான்.

பிறகு கிருஷ்ணன் பட்டாளத்தில் சேர்ந்தால் நன்றாக ஓடியாடி விளையாடலாம் என்று நினைத்

தான்; அதில் சேர்ந்து சில நாட்கள் காலங்கழித்து வந்தான். அங்கே அவன் தன்னிஷ்டப்படி நடக்க முடியவில்லை. பட்டாளத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடப்பது மிகவும் முடியாத காரியமென்று அவனுக்குத் தோன்றிற்று. ஆகையால் அவன் அத் தொழிலையும் விட்டுவிட்டான்.

கிருஷ்ணன் வேறு தகுந்ததொரு வேலையைத் தேடிக்கொண்டு ஊர்ஊராகச் சென்றான். அந்த உடம்பு வளையாத சோம்பேறிக்கு வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக அவன் கம்பெனி ஆபீஸ் ஒன்றைக் கண்டான்; அங்கே ஏதாவது வேலை கிடைக்குமா என்று அந்த ஆபீஸ் மானேஜரிடம் சென்று வணங்கி நின்றான்.

மானேஜர்:—"நீ யாரப்பா? வந்த காரியமென்ன?"

கிருஷ்ணன்:—" எஜமானரே, நான் ஒரு ஏழைப் பையன். எனக்குத் துணை புரிவார் யாருமில்லை. தாங்கள் தயவு செய்து எனக்கு ஒரு சேவகன் வேலையாவது கொடுக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்."

மானேஜர்:—"நீ படித்திருக்கிறாயா? இதற்கு முன் என்ன தொழில் செய்தாய்?"

கிருஷ்ணன்:—“ஐயா, நான் கொஞ்சம் படித்தவுடன் பள்ளிக்கூடத்தை விட்டேன்; சில நாள் பாத்திரங்களை விற்றேன்; சில நாள் தையல் கடையில் துணிகளைத் தைத்தேன்; சில நாள் பட்டாளத்தில் இருந்தேன்; அவைகளெல்லாம் மிகவும் கஷ்டமான வேலைகளானபடியால் விட்டு விட்டேன்.”



மானேஜர்:—“தம்பி, பல வேலைகளுக்கும் உதவாத நீ இந்த ஆபீசு வேலைக்கும் உதவமாட்டாய். உனக்குத் தகுந்த வேலை கிடைப்பதரிது. நீ போகலாம்.”

கடைசியாகக் கிருஷ்ணன் கிடைத்த வேலைகளில் நிலைத்து இராமல் வந்து விட்டதைப் பற்றி வருந்தினான்; உணவின்றிக் கஷ்டப்பட்டான்.

கேள்விகள்:—

(1) கிருஷ்ணன் பாத்திரங்கள் விற்கும் தொழிலை ஏன் விட்டு விட்டான்? (2) அவன் ஏன் துணி தைக்கும் தொழிலில் அமர்ந்து கொண்டான்? (3) கிருஷ்ணன் ஏன் பட்டாளத்தில் சேர்ந்தான்? (4) அவன் அத்தொழிலையும் விடுவதற்கு என்ன காரணம்? (5) கிருஷ்ணனுக்கு ஏன் கம்பெனி மானேஜர் வேலை கொடுக்கவில்லை? (6) கிருஷ்ணனுக்குத் துன்பம் ஏற்பட்டதற்கு என்ன காரணம்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க;—

(1) .....மில்லை......மில்லை. (2) கிருஷ்ணன் ஒரு......பையன் (3) நான் சில நாள்...விற்றேன்; (4) கடையில் துணிகளை சிலநாள்... விற்றேன்.

4. சாரணீயம்

கலாசாலைகளில் வாசிக்கும் மாணுக்கர்களில் சிலர் விசித்திரமான உடை தரித்து விசேஷகாலங்களில் பணி செய்து வருகிறார்கள். அவர்களைச் சாரணச் சிறுவர்கள் என்று நாம் அழைக்கிறோம். அவர்கள் சாரண இயக்கத்தின் அங்கத்தினர்களே. அவர்கள் நல்லொழுக்கமும், காருண்ய சிந்தையும் உள்ளவர்கள்; தங்கள் தேசத்துக்காகவும், அரசனுக்காகவும், பொது நன்மைக்காகவும் பல இடங்

களில் தொண்டு செய்துவருகிறார்கள்; சுயநல மில்லாமலும் எவ்விதக் கைம்மாறு இல்லாமலும் சந்தோஷமாக எல்லோருக்கும் உதவி செய்து வருகிறார்கள்.

சாரணச் சிறுவர்கள் ஆங்காங்குத் தனித் தனிக் கூட்டங்களாக இருப்பார்கள். ஒரு கூட் டத்தை ஒரு ‘ யூனிட் ’ என்று சொல்லுகிறோம்.



சாரணச்சிறுவர்கள்

ஒவ்வொரு யூனிட்டிலும் மூன்று பிரிவுகள் இருக் கக் கூடும். அவையாவன குருளையர் மந்தை, சார ணத் தொகுதி, திரிசாரணக்குழு. ஆறு வயது முதல் பதினொரு வயது வரையிலுள்ள சிறுவர் கள் குருளையர்களாகவும், பதினொன்றுக்கு மேல்

பதினேழு வயது வரை உள்ள பிள்ளைகள் சாரணர் படையாகவும், பதினேழுக்கு மேற்பட்டவயதுள்ள வர்கள் திரிசாரணர்களாகவும் சேர்ந்து பணி செய்துவருகிறார்கள்.

சிறுவர்களைப் போலவே சிறுமிகளும் இவ்வி யக்கத்தில் சேர்ந்து சுயநலம் கருதாமல் பிறருக்கு உண்டாகும் கஷ்டங்களையும் அபாயங்களையும் நீக்கும் பொருட்டுக் கண்ணுங் கருத்துமாய்ப் பணிசெய்து வரலாம். ஆனால், அவர்களுக்கென்று இதில் ஒரு தனிப் பிரிவு உண்டு. அதை ஆங்கிலத் தில் கொ்ல் கைட்ஸ் (Girl Guides) என்கிறோம்.

சாரணர் படையைச் சேர்ந்த ஒரு மாணக்கன் ராஜ விசுவாசத்தோடும், தன் கௌரவத்தைக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோ டும், பிறருக்காக உழைக்கவேண்டும் என்ற ஆசை யோடும் இருக்கவேண்டும். கடவுள், அரசன், பெற்றோர், பெரியோர் முதலியவர்களிடத்தில் தன் னுடைய கடமைகளைச் சரிவர செய்து முடிக்க வேண்டும். நாணயமுள்ளவனுகித் தனக்கும் தன் படைக்கும் தன் பாடசாலைக்கும் நன்மதிப்பு ஏற் படும்படி நடந்துகொள்ள வேண்டும். ஜாதி, மதம், பணக்காரன், ஏழை என்ற எவ்வித பேதமில்லா மலும், பிரதிபலனை எதிர்பாராமலும், சந்தோஷத் தோடு எப்போதும் பிறருக்கு உதவி செய்யவேண் டும். ஆடம்பரமில்லாமல் செட்டாகச் செலவு

செய்யவேண்டும். எப்போதும் தைரியமாகவும் முகமலர்ச்சியோடும் இருக்க வேண்டும். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றிலும் சுத்தமாக இருக்கவேண்டும்.

நோயுள்ளவனும் பலவீனனும் பிறருக்காக உழைக்க முடியாதல்லவா! சாரணனின் உறுதிப் படி அவன் பிறருக்குப் பணி செய்யவேண்டும். ஆகையால் ஒவ்வொரு சாரணனும் தேகபல முள்ளவனாய் இருத்தல்வேண்டும். எவ்வித வியாதி யும் தன்னிடம் அணுகா வண்ணம் காத்துக் கொள்ளவேண்டும். ஆகையால் சாரணர்கள், பல வித விளையாட்டுகளையும், தேகாப்பியாசங்களையும் செய்யவேண்டும். ஜலத்தில் விழுந்தவர்களைக் காப் பாற்றவேண்டியதற்காகச் சாரணர்கள் தண்ணீரில் நன்றாய் நீந்துவதற்குக் கற்றுக் கொள்ளவேண் டும். காயம் பட்டவர்கள், நெருப்பில் அகப்பட்டவர் கள், நோயாளிகள் முதலியவர்களுக்குத் தற்கால சாந்திக்காகச் சிகிச்சை செய்யத் தெரிந்துகொள்ள வேண்டும்.

கேள்விகள்:—

(1) சாரணர்கள் என்ன நல்ல வேலை செய்கிறார்கள்? (2) சிறுமி களுக்குப் பிரத்தியேகமாக ஏற்பட்ட சாரணப் பிரிவிற்கு என்ன பெயர்? (3) ஒரு சாரணன் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? (4) ஒரு சாரணன் தெரிந்து கொள்ளவேண்டியவை யாவை? (5) மூன்று சாரணப் பிரிவுகள் யாவை?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க,—

(1) சாரணன் தன்னுடைய...சரிவர செய்து முடிக்கவேண்டும். (2) தன் படைக்கும் பாடசாலைக்கும்...ஏற்படும்படி அவன நடந்து கொள்ளவேண்டும். (3) ஒரு சாரணன்...எதிர் பாராமல் ... எப்போதும் பிறருக்கு .....செய்யவேண்டும். (4) ...இல்லாமல்... செலவு செய்ய வேண்டும்.

---

5. அரசனும் மான்களும்

ஒரு வனத்தில் அழகான பல மான்கள் கூட்டமாக வசித்து வந்தன. அவைகளெல்லாம் மிகவும் விசுவாசத்தோடும் ஒற்றுமையோடும் வாழ்ந்து வந்தன. அவற்றுள் மிக்க அழகானதும் புத்தியுள்ளதுமான ஒரு மான் உண்டு. அதற்குக் குணசுந்தரன் என்று பெயர். எல்லா மான்களும் குணசுந்தரனைத் தங்களுக்குத் தலைவனாக ஏற்படுத்தின. குணசுந்தரனும் தன் இனத்தார் எல்லோருக்கும் யாதொரு இடையூறும் நேரிடாதபடி, அவைகளைக் காப்பாற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தது.

ஒரு சமயம் அக்காட்டிற்கு ஓர் அரசன் தன் பரிவாரங்களோடு வேட்டையாட வந்தான்; மான்களின் வனப்பைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து,

அவைகளை வேட்டையாடிப் பிடிக்க எண்ணி னான்; தன் பரிவாரங்களுக்கு உத்தரவிட்டான். வேட்டைக்காரர்கள் மான்களை விரட்டிப் பிடிக்க ஆரம்பிக்கவே, மான்களெல்லாம் நடு நடுங்கித் தங்களது தலைவனாகிய குணசுந்தரனிடம் கூட்ட மாக ஓடிவந்தன. இதை அறிந்த குணசுந்தரன் தன் இனங்களைக் காக்கக் கருதி ஒரு பக்கமாக வழி காட்டி ஓடிற்று. மற்ற மான்களெல்லாம் அதைப் பின்தொடர்ந்தன. எல்லாமான்களும் ஒரே கூட்ட மாய் ஓடுவதைக் கண்ட அரசனும் வேடர்களும் அவற்றைப் பின் தொடர்ந்து ஓடினார்கள்.

மான்கள் வெகுதூரம் ஓடி ஒரு நீரோட்டத் தின் அருகில் வந்து சேர்ந்தன. அதைக் கடந்து அக்கரை சென்றாலொழிய அவைகள் தப்பிப் பிழைக்க வேறு வழியில்லை. அந் நீரோட்டத் தைத் தாண்டிப் பாய்ந்து செல்லவோ அல்லது குறுக்கே இறங்கிச் செல்லவோ மான்களுக்கு யாதொரு வசதியும் இல்லாமலிருந்தது. குணசுந் தரனுக்கோ பகைவர் கையினின்று தன் இனத்தா ரைக் காக்கவேண்டும் என்ற கவலை அதிகரித்தது. மிகப் பரபரப்புடன் குணசுந்தரன் திரும்பிப் பார்த்தது; அரசனும் வேடர்களும் சமீபித்து விட்டதைக் கண்ணுற்றது. குணசுந்தரனுக்குத் திடீரென ஒரு யோசனை தோன்ற, அது தண் ணீரிற் குதித்தது; நீரோட்டத்தில் நடுவே சென்று

திடமாக நின்றது. அதன் தலை மாத்திரம் தெரிந்தது. அது தன் இனத்தாருக்கு ஜாடை காட்ட, அவை ஒவ்வொன்றாகக் குணசுந்தரன் முதுகில் தாவி அக்கரைசென்றன. கடைசியாக, குணசுந்தரனும் அக்கரை சேர்ந்தது. அப்பொழுது அது தன் முதுகு ஒடிந்திருப்பதைக் கண்டது. அநேக

மான்கள் தாவிக் குதித்ததால் குணசுந்தரன் முதுகு ஒடிந்த போதிலும், அது அதைப் பொருட்படுத்தாமல், தன் இனமாகிய மான்களெல்லாம் உயிர் தப்பினதைப் பற்றி நினைத்து, அந்த மான் கூட்டத்திடையே நின்று கூத்தாடிற்று.

மற்ற மான்களும் தங்கள் தலைவன் குணசுந்தரத்தின் வல்லமையையும் சாமர்த்தியத்தையும் அது தங்களுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்ததையும் பற்றிப் புகழ்ந்து கூறுவது போல இங்குமங்கு ஓடியாடின.

இக்கரையினின்று அக்கரை செல்லக் கூடாமைக்கு வருந்திய மான்களின் செய்கையையும், குணசுந்தரத்தின் அரிய செயலையும் கண்ட அரசனும் அவனது பரிவாரங்களும் குணசுந்தரத்தின் குணத்துக்கு மெச்சினார்கள்; இனி மான்களைப் பிடிப்பதில்லை என உறுதியான தீர்மானம் செய்துகொண்டு வீட்டுக்குத் திரும்பினார்கள்.

(1) மான்கூட்டத்தின் தலைவன் யார்? (2) காட்டில் அரசன் என்ன செய்ய எண்ணினான்? (3) குணசுந்தரன் தன் இனத்தாரை எப்படி காப்பாற்றியது? (4) அரசன் மான் வேட்டையாடுவதில்லை என்று ஏன் தீர்மானம் செய்துகொண்டான்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) மான்கள் மிகவும் — வாய்ந்தன. (2) குணசுந்தரனுக்குத் திடீரென — தோன்றவே, அது தண்ணீரில் —. (3) மான்களும் குணசுந்தரன் — — அக்கரை சென்றன.

6. மோட்டார் வண்டி

மாட்டு வண்டி, குதிரை வண்டி, சைகில், புகை வண்டி, பல்லக்கு இவைகளெல்லலாம் மனிதர்களாகிய நாம் ஓர் இடத்திலிருந்து வேருரு இடத்திற்குப் போவதற்குப் பிரயாண சாதனங்கள் எனப்படும். இவையல்லாமல் யானை, ஒட்டை, குதிரை முதலிய மிருகங்களின் முதுகின் பேரிலும் ஏறி மனிதர்கள் பிரயாணம் செய்கிருர்கள். இக்காலத்தில் மிக்க விநோதமான பிரயாண சாதனம்



ஒன்று இருக்கின்றது. அதற்கு மோட்டார் வண்டி என்று பெயர்.

இக்காலத்தில் அநேகமாய்ப் பல தேசங்களி லும் மோட்டார் பிரயாண சாதனமாய் இருக்கின் றது. மனிதர்கள் பிரயாணம் செய்வதற்கும் சாமான் கொண்டுபோவதற்கும் இன்னும் பல வித வேலைகளுக்கும் மோட்டார் உபயோகமாகி றது. சில பட்டணங்களில் குப்பை கூளம் முதலிய அசுத்தப் பண்டங்களை வாரிச் செல்வ தற்கும் மோட்டார் உதவுகிறது.



இதர வண்டிகளை மாடு முதலிய மிருகங்கள் இழுத்துச் செல்கின்றன. ரயில் வண்டி நீராவியி ஞல் ஓடுகிறது. மோட்டார் வண்டியின் முன்புறத் தில் அமைக்கப்பட்டிருக்கும் இயந்திரத்தைக் கவ னியுங்கள். அங்கே ஒரு தொட்டி உண்டு. அத்

தொட்டியில் பெட்ரோல் என்ற ஒருவகை மண் ணெண்ணெயை ஊற்றுகிருர்கள். அந்த எண் ணெய் மிகவும் நுட்பமான குழாய் வழியாக வண்டியிலுள்ள இயந்திரத்திற்குள் செல்லுகிறது. அங்கு அது வாயுவாக மாறிக் காற்ருேடு கலக் கிறது. இவ்விதம் காற்றுடன் கலந்த வாயு இன் ஞெரு குழாய் வழியாய்ச் சென்று ஒரு இரும்புக் குழாய்க்குள் செல்லுகிறது. அக் குழாய்க்குள் அகன்ற பாதத்தையுடைய உலக்கைபோன்ற ஒரு கருவி உண்டு. அவ்வுலக்கையோடு விசைச் சக்க ரம் என்ற ஒரு சக்கரம் பொருந்தி இருக்கிறது. வாயுவின் சக்தியினுல் அவ்வுலக்கை ஆடும் பொழுது விசைச் சக்கரம் சுற்றுகிறது. இந்த விசைச் சக்கரம் வண்டியிலுள்ள நான்கு சக்கரங் களில் ஒன்ருேடு இணைக்கப்பட்டிருக்கின்றது. விசைச் சக்கரம் சுற்றும்போது அதோடு இணைக் கப்பட்ட வண்டியின் ஒரு சக்கரம் சுற்றுகிறது. இவ்விதம் வண்டியின் ஒரு சக்கரம் சுற்றவே மற்ற சக்கரங்களும் சுற்றுகின்றன.

மோட்டார் வண்டியை வேகமாய் ஓட்டவும், மெதுவாய் ஓட்டவும், வேண்டியபோது நிறுத் தவும் தக்க வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. வண்டியின் முன்பக்கத்தில் ஒரு சக்கரம் இருக் கிறது. அதற்கு ஸ்டேரிங் என்று பெயர். அதை

இப்படியும் அப்படியும் திருப்புவதனால் மோட்டார் வண்டி நமது இஷ்டப்படி திரும்புகிறது.

வெகு வேகமாய்ச் செல்லக் கூடிய பிரயாண சாதனங்களில் இது ஒன்று. சாதாரணமாய் ஒரு மோட்டார் வண்டி ஒரு மணி நேரத்தில் முப்பது மைல் செல்லக் கூடும்.



இக்காலத்தில் எல்லாவித வேலைகளுக்கும் மோட்டார் உபயோகப்படுகிறது; பிரயாணிகளுக்கு மிகவும் சாதகமாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் மோட்டார் பஸ்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ரயில் வண்டிகள் நின்று நின்று

மெதுவாய்ப் போவதால் அவைகளைவிட பிரயாணிகள் மோட்டார் பஸ்களையே அதிகமாக விரும்புகிறார்கள். நோயாளிகளையும் காயம் அடைந்தவர்களையும் வெகு சீக்கிரத்தில் வைத்திய சாலைக்குக் கொண்டு போவதற்கும், வீடு முதலிய கட்டடங்கள் தீப்பிடித்துக் கொண்டால் தண்ணீரை வாரி ஊற்றி அணைப்பதற்கும், தபால்களைக் கொண்டு போவதற்கும், பளுவான சாமான்களை ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்குக் கொண்டு போவதற்கும் மோட்டார் வண்டிகளையே உபயோகிக்கிறார்கள்.

கேள்விகள்:—

(1) மோட்டார் வண்டி எவ்வெவ்விதங்களில் உபயோகிக்கப்படுகின்றது? (2) மோட்டார் எப்படி ஓடுகிறது? (3) மோட்டார் இயந்திரம் வேலை செய்வதற்கு எந்த எண்ணெயை உபயோகிக்கிறார்கள்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) ரயில் வண்டி — ஓடுகிறது. (2) மோட்டாருக்கு உபயோகிக்கும் எண்ணெய்க்கு — என்று பெயர். (3) காற்றோடு கலந்த வாயு — வழியாய்ச் செல்லுகிறது. (4) மோட்டார் வண்டிக்கு — சக்கரங்கள் உண்டு.

7. தண்ணீர்

நாம் உயிரோடு வாழ்வதற்கு வேண்டிய வஸ்துக்கள் பல இருப்பினும், அவைகளில் மிகவும் முக்கியமானது தண்ணீர். தண்ணீர் எப்படி உண்டாகிறது? சமுத்திரம், குளம், ஆறு முதலியவைகளில் உள்ள ஜலம் சூரிய வெப்பத்தினால் ஆவியாக மாறி மேலே செல்லுகிறது; மேக ரூபத்தை யடைந்து மழையாகப் பெய்கின்றது. அம் மழை நீரே ஆறுகளாக ஓடி ஏரி, குளம், குட்டை இவைகளில் நிரம்புகிறது.

மழை ஜலம் பூமியில் விழுந்தவுடன் பூமியில் உள்ள மண் முதலியவைகளோடு கலப்பதனாலும், குட்டை, குளம் முதலியவைகளில் மனிதர்கள் ஆடுமாடுகளைக் குளிப்பாட்டுவதாலும், பாத்திரங்களைச் சுத்தம் செய்வதாலும், பிணங்களைச் சுட்டு எலும்புகளைத் தண்ணீரில் போடுவதாலும், இவைபோன்ற இன்னும் அநேக காரணங்களாலும் ஜலம் அசுத்தமடைகிறது. அசுத்த ஜலத்தை உட்கொண்டால் நமக்கு வியாதிகள் உண்டாகும்.

ஆகையால் நாம் ஜலத்தைச் சுத்தம் செய்து குடிக்கவேண்டும். ஜீவ ஜந்துக்களுக்கும் நமக்கு சுத்த ஜலம் அவசியமானதே. சுத்த ஜலத்தைக் குடித்தால் இரத்தம் சுத்தமடைகிறது. தேகமும்

சுகமடைகிறது. சுத்தமான தண்ணீருக்கு எவ்வித நிறமும் வாசனையும் சுவையும் இல்லை. அது பார்வைக்குப் பளிங்குபோல் இருக்கும். அதில் காய்கறிகள் சீக்கிரமாக வெந்துவிடும். சுத்தமான தண்ணீரை ஒரு பானையில் ஊற்றி வைத்திருந்தால் அதன் அடியில் வண்டல் இராது. இப்பொழுது சுத்த ஜலத்தின் குணங்களை அறிந்தோமல்லவா? நாம் தேக ஆரோக்கியத்துக்காகச் சுத்த ஜலத்தையே குடிக்கவேண்டும்.



தண்ணீரில் அசுத்தங்கள் பல இருக்கின்றன. அசுத்தமான தண்ணீரைச் சுத்தம் செய்யவதற்குப் பல முறைகள் உண்டு. அசுத்தங்களில் சில

தண்ணீரில் மிதந்துகொண்டிருக்கும்; இன்னும் சில தண்ணீரிலேயே கரைந்திருக்கும். பொதுவாக, எவ்வித ஜலமானாலும் அதிலுள்ள விஷத்தை நீக்குவதற்கு அதைக் காய்ச்ச வேண்டியது அவசியம். காய்ச்சின தண்ணீரையே நாம் உபயோகிக்க வேண்டும். அசுத்தம் தொங்கிக் கொண்டாவது அல்லது மிதந்து கொண்டாவது இருக்கும் தண்ணீரைப் பிளாட்டிங் பேப்பர் முதலிய கருவிகளைக்கொண்டு வடிகட்டினால், அது சுத்தமான தண்ணீராய்விடும். தண்ணீரில் அசுத்தம் கரைந்திருந்தால், அதைக் காய்ச்சி அதனின்று எழும் நீராவியைக் குளிரச்செய்து ஜலமாக மாற்றி அதை உபயோகிக்கலாம். வைத்திய சாலைகளில் நோயாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய மருந்தில் இவ்விதமாகத் தயாரிக்கப்பட்ட சுத்த ஜலத்தையே உபயோகிக்கிறார்கள்.

மழை ஜலம் பூமியில் விழுவதற்கு முன்பு மிகப் பரிசுத்தமாக இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? அவ்வித சுத்த ஜலத்தை நாம் அடைவது எப்படி? ஒரு வீட்டின் மேல் மாடியிலோ அல்லது தூசிகள் படாத நடுமுற்றத்திலோ, வாய் அகன்றுள்ள ஒரு பாத்திரத்தை வைத்தால், ஆகாயத்திலிருந்து கீழே விழும் மழைத்துளிகள் அதில் விழும். அதில் நிரம்பியுள்ள தண்ணீர் மிகப்பரிசுத்தமானது. இதை

மேலே சொன்ன சுத்த ஜலத்தைப் (டிஸ்டில்டு வாட்டர்) போல் எல்லாவற்றிற்கும் உபயோகப் படுத்தலாம்.

பக்கத்திலுள்ள படத்தைப் பாருங்கள்.



மூன்று பானைகள் ஓர் ஏணியில் ஒன்றன் மேல் ஒன்ருக வைக்கப் பட்டிருக்கின்றன. மேலே உள்ள இரண்டு பானைகளுக்கும் அடிப் பாகத்தில் சிறு துவாரங்கள் செய்து அவற்றில் வைக்கோல் துரும்புகள் செருகப் பட்டிருக்கும். மேற் பானையில் கால் பாகம் அடுப்புக் கரியையும், அதற்கு அடுத்த கீழ்ப் பானையில் கால் பாகம் பெருமணலையும் போட்டு மேற் பானையில் தண்ணீரை ஊற்ற வேண்டும். அத் தண்ணீர் அங்குள்ள அடுப்புக் கரிகளுக்கு இடையில் புகுந்து வைக்கோல்

துரும்பின் வழியாக மணல் உள்ள இரண்டாவது பானையில் இறங்கும். இப்படி இறங்கும்பொழுது தண்ணீரில் உள்ள அசுத்தத்தை அடுப்புக்கரி பிடித்துக்கொள்ளும். அதன் பின்பு இரண்டாம் பானையில் இறங்கிய நீர் மணலின் வழியாகப் புகுந்து மூன்ருவது பானையில் விழும். மூன்ரும் பானையில் உள்ள நீர் சுத்தமாக இருக்கும்.

கேள்விகள்:—

(1) மழை ஜலம் சுத்தமா? அசுத்தமா? (2) மழை ஜலம் எப்படி அசுத்தமடைகிறது? (3) நாம் சுத்த ஜலத்தை ஏன் குடிக்கவேண்டும்? (4) அசுத்தமான தண்ணீரை எப்படி சுத்த ஜலமாகச் செய்யலாம்? (5) நாம் சுத்தமான தண்ணீரை எப்படி அடையக்கூடும்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) தண்ணீர் சூரியவெப்பத்திஞல் — மாறி — செல்லுகிறது. (2) அசுத்த ஜலத்தைக் — நாம் — அடைகிரும். (3) சுத்தமான தண்ணீருக்கு எவ்வித — — — இல்லை. (4) மழை ஜலம் மிக்க —— ஆனது.

3. வௌவால்

மாலை நேரங்களில் கொஞ்சம் இருட்டாக இருக்கும்போது, சில சமயத்தில் வீடுகளில் சில ஜந்துக்கள் கீச்சுச் சத்தம் செய்துகொண்டு சரேலென்று பறந்து போகின்றதை நீங்கள்

பார்த்திருக்கலாம். இரண்டொரு தடவைகளில் உங்கள் தலைக்குமேல் இவை பறந்து போவது முண்டு. இவைதான் வௌவால் எனப்படும்.

வௌவால் ஒரு விசித்திரமான பிராணி. இதன் தேக அமைப்பைபற்றி நீங்கள் எப்போ தாவது கவனித்திருக்கிறீர்களா? வௌவால் படத்தைக் கவனித்துப் பாருங்கள். நடுவில் எலி யின் உடலைப்போல் இருக்கும். இரு பக்கங்களி லும் விசிறிபோன்ற இரண்டு இரக்கைகள் இருக்



கின்றன. எலியைப் போலவே இதற்கும் இரு காதுகள் உண்டு. வௌவாலின் தேகம் முழு வதும் சிறிய மயிர் அடர்ந்திருக்கிறது. இதற்கு நான்கு கால்கள் இருக்கின்றன. வௌவால் தன் இரக்கைகளின் உதவியால் பறந்து செல்லுகிறது.

வௌவாலின் பறக்குந்தன்மையைக்கொண்டு இதைப் பறவையினத்தில் சேர்க்கலாமா? இதன் சிறகுகளுக்கும் பறவைகளின் சிறகுகளுக்கும் பல வேறுபாடுகள் உண்டு. பறவையின் உடலில் பல

இறகுகள் பொருந்தியிருக்கின்றன. வௌவாலின் சிறகுகளோ அவ்விதமில்லாமல் ஒரே தோலினுல் இணைக்கப்பட்டிருக்கின்றன. பறவைகளுக்குப் பற்கள் கிடையா; வௌவாலுக்கோ பற்கள் இருக்கின்றன. பறவைகள் கூடு கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். வௌவால் மிருகங்களைப் போல் குட்டி போட்டுப் பால் கொடுத்து வளர்க்கும். ஆகையால், வௌவாலைப் பறவையினத்தில் சேர்ப்பதா அல்லது மிருக இனத்தில் சேர்ப்பதா என்ற கேள்வி உண்டாகிறது. பிராணி நூலாசிரியர்கள் உலகத்திலுள்ள ஜந்துக்களையெல்லாம் பலவகைகளாகப் பிரித்திருக்கிறுர்கள். அவைகளில் "தாய்ப்பால் குடித்து ஜீவிப்பன" என்ற ஒரு பிரிவு உண்டு. வௌவால் இப்பிரிவினையைச் சேர்ந்தது. ஆகவே இதை மிருகவினத்தில் சேர்க்கவேண்டியதாக இருக்கிறது.

வௌவால்களில் சில சிறிதாயும் சில பெரிதாயும் இருக்கின்றன. 'துரிஞ்சல்' என்ற சிறிய வௌவால்களையே அநேகமாய் வீடுகளிலும், கோவில்களிலும், பாழடைந்த மண்டபங்களிலும் நாம் பார்க்கிறேம். இவைகள் வண்டு, ஈ, கொசு முதலிய சிறு பூச்சிகளைப் பிடித்துத்தின்று ஜீவிக்கின்றன. இவைகள் இருட்டு அறைகளில் தலைகீழாகத் தொங்கும்; அங்குள்ள பாத்திரங்களின்

மேல் மூத்திரத்தையும் மலத்தையும் கழிக்கும். இதன் மூத்திரத்தை "வௌவால் சாரம்" (எச்சம்) என்று சொல்லுவார்கள். வௌவால் புழுக்கையை மிகச் சிலர் மருந்துக்கு உபயோகிக்கிறார்கள். அது சிறந்த எருவும் ஆகும்.



பெரிய வௌவால்கள் காடுகளில் வசிக்கும். சாதாரணமாய்க் காகமும், கருடனும் இவை போன்ற உருவமுள்ளன. இவைகள் பழங்களையே பெரும்பாலும் ஆகாரமாகக் கொள்வதால் இவைகளைப் "பழந்தின்னும் வௌவால்" என்று கூறுவார்கள். இவை காடுகளில் அடர்ந்த மரக் கிளைகளில் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருக்

கும். இரவில் தான் இரை தேடச் செல்லும். இராக்காலங்களில் இவைகள் நாடுகளுக்கும் வந்து நமது கொல்லேப் புறங்களில் இருக்கும் பழங்களைத் தின்றுவிட்டுப் போகும். பகலில் இவைகளுக்குக் கண் தெரியாது; இருட்டில்தான் நன்ருய்த் தெரியும். ஆகையால் இவை பகலில் வெளியே வருவதில்லை.

கேள்விகள் :—

(1) வௌவால் எதனுல் பறந்து செல்லுகின்றது? (2) வௌவால் பறவையா? விலங்கா? (3) வௌவாலின் சிறகுகள் எப்படி இருக்கின்றன? (4) வௌவால் ஜீவப்பிராணிகளில் எந்த வகுப்பைச் சேர்ந்தது? ஏன்? (5) வௌவாலின் சாரம் எதற்கு உதவும்? (6) வௌவால் பகலில் ஏன் வெளியில் வருகிறதில்லை?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) வௌவால் ஒரு——பிராணி. (2) வௌவாலின் சிறகுகள் ஒரே——சேர்க்கப்பட்டிருக்கின்றன. (3) பறவைகளுக்கு——கிடையா; வௌவாலுக்கோ பற்கள்—— (4) வௌவால் குட்டிபோட்டுப்——கொடுத்து வளர்க்கும். ஆகையால் அது——இனத்தைச் சேர்ந்தது. (5) துரிஞ்சில்——களிலும் பாழடைந்த——களிலும் காணப்படுகின்றன. (6) வௌவாலுக்கு——கண் தெரியாது;——நன்ருய்த் தெரியும்.

---

9. நல்வழி

கடவுளைத் தொழுது காலையி லெழுந்திரு.
காலையி லெழுந்துன் வேலையில் நின்றிடு.
வேலையிற் சோம்பலை விட்டு நீ முயலுக.
முயலும் வேலையை முடித்திடப் பழகு.
சுத்த நீரிலே நித்தமும் முழுகு.
தூய ஆடையை நேயமா யுடுத்து.
நல்ல உணவையே நாடி நீ யுட்கொள்.
தீய உணவை நோயென விலக்கு.
நல்லவ ருறவை நயந்து நீ கொள்ளுக.
தீயவ ருறவை சிந்தித் திடாதே.
பொய்யைத் தள்ளி மெய்யைத் தழுவு.
பொய்யினுங் கொடிய பொறுமையை யகற்று.
அரசனுக் கடங்கி அமைதி யாயிரு.
அகத்தினுள் கள்ள மதனை நினையாதே.
குருமொழி கொண்டு பெருமகிழ் வோடிரு.
குருவழி பாட்டைக் குறைவறச் செலுத்து.
வித்தை விரும்பி நித்தமு மோது.
ஓதுவதிந்தப் போதெனக் குறிக்கொள்.
கொண்டவப் பொழுதில் குறைவற ஓது.
ஓதி யுணர்ந்து நீ உணர்ந்தவா றொழுகு.
எல்லோ ரிடத்தும் இனிமையாய்ப் பேசு.
இயன்ற வரையில் எளியவர்க் குதவு.
வைதிடு வோரையும் வாழ்த்தப் பழகு.
வாழ்த்தக் கேட்கின் தாழ்த்திக் கொள்ளுக.

பெற்றவர் தம்மைப் பெருமைப் படுத்து.
கற்றவர் தம்மைக் கண்ணியப் படுத்து.
நல்ல வழியில் நாளைச் செலவழி.
நாதனைத் தொழுதுமுற் போதினி லுறங்கு.
இன்ன நிலையி லிருக்கப் பழகின்,
இனிய வாழ்வு தனையடை வாயே.

—வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியார்

கேள்விகள்:—

வரகவி பாரதியார் கூறிய புத்திமதிகளில் ஏதாவது இரண்டைச் சொல்.

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) ——ஆடையை நேயமாய் உடுத்து. (2) பொய்யைத் தள்ளி——தழுவு. (3) பொய்யினும் கொடிய—— அகற்று. (4) பெற்றவர் தம்மை——படுத்து.

---

10. குருடர்களுக்கான பள்ளிக்கூடங்கள்

நாம் நமது கண்களினால் சகல வஸ்துக்களையும் பார்க்கிறோம்; புத்தகங்களை வாசிக்கிறோம். நமது இரண்டு கண்களையும் மூடிக்கொண்டோமானால் வெளியில் நடக்கிற ஒரு சம்பவம்கூட நமக்குத் தெரியாது. ஒரு எழுத்தைக் கூட நாம் வாசிக்க முடியாது. ஆனால் பிறவி முதல் கண்களின் பார்வை இழந்த குருடர்களும் இப்பூவுலகில் இருக்கின்றார்கள். அவர்கள் வெளியில்

நடக்கும் சம்பவங்களைப் பார்க்கவேண்டாமா? புத்தகங்களைப்பார்த்து வாசிக்கவேண்டாமா? அப்படிப்பட்டவர்களும் கூடச் சுலபமாக வாசிக்கக் கூடிய முறைகளை அறிவாளிகள் கண்டுபிடித்துக் கையாண்டு வருகிறார்கள்.

குருடர்களுக் கென்று நம் நாட்டில் அநேக பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே அவர்கள் வாசிக்கும் புத்தகங்களுக்கும் நாம் வாசிக்கும் புத்தகங்களுக்கும் வித்தியாசம் உண்டு. அவர்கள் வாசிக்கும் புத்தகத்தில் எழுத்துக்களின் மேலே கோடுகள் சிறிது எழுச்சியாய்ப் பதியப்பட்டிருக்கின்றன. குருடர்கள் அவ்வெழுத்துக்களைத் தடவிப் பார்த்து இன்ன எழுத்து என ஊகித்து, அதன் மூலமாய் வெகு வேகமாய் வாசித்து வருகிறார்கள்.

வெகுநாளைக்கு முன் ஒரு பெரியார், குருடர்கள் தடவிப் பார்ப்பதன் மூலம் விஷயத்தை அறியக்கூடும் என்பதைக் கண்டுபிடித்தார். அது எப்படியெனில், அவர் ஒரு நாள் ஒரு குருட்டுப் பையனுக்கு அரை ரூபாய் நாணயத்தைக் கொடுத்தார். அவன் அதைத் தடவிப் பார்த்து அரை ரூபாய் எனத் தெரிவித்தான். அதிலிருந்துதான் அப்பெரியாருக்கு இந்த விஷயம் புலப்பட்டது. அவர் முதல் முதலில் அந்தக் குருட்டுப் பையனுக் கல்வி கற்பித்து வெற்றி யடைந்தார்.

அதன் பின் குருடர்களுக்காகப் பள்ளிக்கூடங்கள் பல உண்டாயின. இப்போது எவ்வளவோ குருடர்கள் தங்கள் வாழ்வை வீணாக்காமல் இப்பாடசாலைகளில் சேர்ந்து வாசித்து மேம்பாடு அடைகிறார்கள்.

செவிடர்களுக்கும் ஊமைகளுக்கும் சில பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஈடுபட்டு அவர்களின் நன்மைக்காக நாம் உழைத்தல் நல்ல காரியமாகும்.

கேள்விகள்:—

(1) குருடர்களுக்குக் கல்வி கற்பிக்கக்கூடும் என்று ஒரு பெரியார் எப்படி அறிந்தார்? (2) குருடர்களுக்காக எழுதப்படும் புத்தகங்களுக்கும் நாம் வாசிக்கும் புத்தகங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கின்றது?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) குருடர்கள்——முடியாது. (2) நமது நாட்டில் ——பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

---

11. புளி

இப்பூவுலகில் உள்ள கோடிக் கணக்கான ஜீவராசிகளில் மனிதர்களே தங்களுடைய ஆகாரத்தைச் சமையல் செய்து சாப்பிடுகிறார்கள். மற்றப் பிராணிகள் பதார்த்தங்களைப் பச்சையாகத்

தின்னுகின்றன. மனிதர்களிலும்கூட நாகரிகமில்லாத சிலர் பச்சை மாமிசங்களையும் காய் கிழங்குகளையும் தின்கிறார்கள். மானிடர்களே உருசியறிந்து சாப்பிடுகிறவர்கள். ஆகாரப் பொருள்களின் உருசி பல இருப்பினும், அவைகளையெல்லாம் இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, கரிப்பு, உறைப்பு புளிப்பு என ஆறு வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். இவற்றை "அறுசுவை" என்றும் சொல்வதுண்டு.

நாம் சாப்பிடக் கூடிய சாப்பாட்டில் புளிப்பு வேண்டியிருந்தால் புளியையோ அல்லது எலுமிச்சம் பழத்தையோ உபயோகிக்கிறோம். ஆனால், விசேஷமாய்க் கிடைப்பது புளிதான். இது ஒரு வகை மரத்திலிருந்து நமக்குக் கிடைக்கிறது. புளியமரம் சாதாரணமாய் நம் நாடுகளில் எங்கும் காணப்படுகின்றது.

இம்மரம் எல்லா நிலத்திலும் பயிராகும். இதைச் சாலைகளின் இருபக்கங்களிலும் வைத்துப் பயிராக்குகிறார்கள். இது நிழலைத் தரும். வழிப்போக்கர்களும் வெயிலில் வெகுதூரம் நடக்கும்போது இதன் பழத்தையோ அல்லது பிஞ்சையோ வாயில் போட்டுக் கொண்டு செல்லுவார்கள். புளியமரங்கள் அநேக வருஷங்கள் வரையில் உயிரோடிருக்கும். தோப்புக்களிலும் திட்டுத் திடல்களிலும்

தாமாகவே கூடச் சில சமயங்களில் உற்பத்தியாகும். இவை வளர்வதற்குத் தண்ணீர் பாய்ச்சிப் பாதுகாக்க வேண்டியது அவசியமில்லை.

புளிய மரத்தின் ஒவ்வொரு பாகமும் மிகவும் கெட்டியாகவே இருக்கும். வேர், வளார் போன்றவைகள் இன்னும் அழுத்தமானவைகள். "புளியங் கொம்பைப் பிடித்தவனும் கீழே விழுவானோ?" எனப் பழமொழியும் வழங்குகிறது. வேர் பூமிக்குள் கீழ் நோக்கி வெகு தூரம் செல்லுகின்றது. பக்கவேர்களும் பக்கங்களில் எழுபது எண்பது கஜதூரம் வரையில் பரவும். இவ்வாறு வேர்கள் செல்வதனால் மரத்துக்கு வேண்டிய ஏராளமான ஜலமும் மரவுணவுச் சாரமும் பூமியிலிருந்து கிடைக்கின்றன. அதனால் அது மேன் மேலும் செழித்து வளர வசதி ஏற்படுகிறது. பெருங் காற்று அடிக்கையிலும் புளியமரம் கீழே சாய்ந்து விழுந்து விடாமல் அதன் வேர்கள் காக்கின்றன.

ஒவ்வொரு வருஷத்திலும் சித்திரை வைகாசி மாதங்களில் புளியமரங்கள் பூத்துக்காய்க்க ஆரம்பிக்கும். மாசி மாதத்தில் காய்கள் எல்லாம் பழுத்துக் காற்றினால் கீழே விழும். மனிதர்களும் மரங்களில் ஏறி உலுக்குவார்கள்; உலுக்கிப்பொறுக்கின பழங்களை நன்றாக வெயிலில் உலர்த்தி

மேலுள்ள ஓட்டை நீக்குவார்கள்; பிறகு சுளேயை அதிலுள்ள கொட்டையை நீக்கிவிட்டுப் பானே யிலோ வேறு தகுந்த தொரு பாத்திரத்திலோ போட்டு வைத்துக் கொண்டு வேண்டும்போது உபயோகிப்பார்கள்.

நம் நாட்டினர் சாப்பாட்டில் விசேஷமாய்ப் புளியைக் கரைத்துக் குழம்பு, ரசம் முதலியவை களேச் செய்து உபயோகிக்கின்றனர் ; சிறு பிஞ்சு களேத் துவையல் செய்து சாப்பிடுகிருர்கள் ; காய் களேக் காயவைத்தோ அல்லது பச்சையாக நசுக் கியோ ரசம் முதலியவை செய்கிருர்கள்; புளியங் கொழுந்தைக் கொண்டு துவையல் செய்கிருர்கள்.

புளியம் வளார் (மிலாறுகள்), கிளேகள், தழை முதலியவைகளே அடுப்பெரிக்கிருர்கள். அடி மரத்தைச் செக்கு உரல், குந்தாணி, உலக்கை, உளிப் பிடி, கொட்டாப்பிடி முதலியவைகளாகச் செய்து கொள்ளுகிருர்கள். புளிய இலே பாத்திரங்கள் தேய்க்க உதவும்.

புளியங்காய்கள் வளேந்து கோணலாக இரு க்கும். வேடிக்கையாகப் "புளியங்காய், ஒழுங்காய்க் காரியம் செய்யப்பட்டிருக்கிறது" என்று சொல்லு வதுமுண்டு. புளியங் கொட்டைகளே மாட்டுத் தொட்டிகளில் கொட்டுவார்கள். அது ஊறின

தண்ணீரை மாடுகள் குடித்தல் நன்று என்று சொல்கிருர்கள். ஏழை ஜனங்கள் புளியங் கொட்டைகளை வறுத்து உரலில் போட்டுக் குத்தித் தோலைப் போக்கி ஜலத்தில் ஊற வைத்து உப்புப் போட்டு தின்பார்கள். புளியங் கொட்டைத் தோலை ஊறவைத்து ஒருவிதப் பசை காய்ச்சுவதுண்டு.

புளி அதிக உஷ்ணம் என்றும், சீக்காளிகள் புளியை விலக்குவது நன்மை என்றும் வைத்தியர்கள் சொல்லுகிருர்கள்.

கேள்விகள்:—

(1) அறுசுவை என்று எவைகளைச் சொல்லுகிருேம்? (2) புளியை வளர்ப்பதால் என்ன உபயோகம்? (3) வேர்கள் புளியமரத்திற்கு எவ்வாறு உதவுகின்றன? (4) எந்த மாதங்களில் புளிய மரங்கள் பூத்துக் காய்க்கும்? (5) புளியங்காய் எப்படி இருக்கும்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) நாம் மரஙகளில் ஏறி——பொறுக்கின பழங்களை நன்ருக வெயிலில்——. (2) புளிய——பிடித்தவன்—— விழமாட்டான். (3) புளிய இலை——தேய்க்க உதவும்.

---

12. மாத்துக் கிளி

கங்கா நதியின் சமீபத்தில் உள்ள ஒரு காட்டில் செழிப்பான பெரிய மரம் ஒன்று இருந்தது.

அது மிகப் பரந்து பல கிளைகளோடும், பல வர்ணங்களையுடை புஷ்பங்களோடும், பழங்களோடும் விளங்கி நின்றது. அதைக் கண்ணுற்ற பல கிளிகள் அவ்விடம் சென்று காய் கனிகளைத் தின்று களித்தன. அநேக பறவையினங்களும் அடிக்கடி அம்மரத்துக்கு வந்து பழங்களைத் தின்று செல்வது வழக்கம். அம் மரப்பொந்துகளில் கூடுகளைக் கட்டிக்கொண்டு அநேக கிளிகள் வசித்து வந்தன. அதன் கிளைகளிலும் பல குருவிகள் தங்கள் கூடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தன. இவ்விதமாக அநேக வருஷங்கள் சென்றன.

ஒரு நாள் அக் காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்த வேடனொருவன் அம் மரத்தின் கிளைகளில் உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்த அழகான சில பக்ஷிகளைப் பிடித்துக்கொண்டு போக எண்ணினான்; தன் கையில் உள்ள விஷம் தடவப்பட்டிருந்த அம்புகளை அம்மரத்தை நோக்கி யெறிந்தான். அவை மிகவும் கடுமையாகச் சென்று மரக்கிளைகளிலும் அடிமரத்திலுமாகப் பல விடங்களில் தைத்தன. புண்ணிய வசத்தினால் அங்கிருந்த எல்லாப் பறவைகளும் பறந்தோடி விட்டன.

அம்மரப் பொந்துகளில் ஒன்றில் வசித்து வந்த ஒரு கிளிக்கு மாத்திரம் அம்மரத்தை விட்டுப்போக மனமில்லை. ஆனல், அங்குத் தங்கினல் வேடன் கையிலகப்பட்டுத் தான் உயிர் துறக்க வேண்டுமேயென்று அது அஞ்சிற்று; வேட



னுக்குத் தெரியாமல் பறந்துபோய்ப் பக்கத்திலிருந்த ஒரு புதரில் பதுங்கி யிருந்தது. வேடன் தனக்கு ஒன்றும் கிடைக்காததால் மன வருத்தமடைந்து சென்முன்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் விஷ அம்புகள் தைத்ததனுல் அம் மரம் முழுவதும் வாடிச் சிறிது சிறிதாகப் பட்டுப்போக ஆரம்பித்தது. ஓடிப்போன கிளிகளெல்லாம் அம்மரத்தண்டை வந்து பார்த்தன; "இனி இதில் இருப்பதில் பலனில்லை" எனக்கூறி, வேறு மரங்களுக்குச் சென்றன. புதரில் பதுங்கியிருந்த கிளி மரத்தண்டை வந்தது. மரம் பட்டுப்போனதைப் பார்த்து மனம் சகிக்காமல் பலவாறு புலம்பிற்று. "ஐயோ! நான் மகா பாவி! குடியிருந்த வீடு பாழாய்ப்போகப் பார்த்த பாவியானேன்? ஏ கடவுளே! இவ்விஷ அம்புள்ள வேடனை ஏன் இங்கு அனுப்பினீர்? நான் என் செய்வேன்? நான் இதில் பிறந்தேன்; இதில் வளர்ந்தேன்; இதன் பழங்களையே தின்றேன்; இதன் கிளைகளின் மேல் பறக்கவும் கற்றேன். என்னருமை மரம் இப்போது பட்டுப்போக நான் பார்ப்பேனே? இதை விட்டு வேறு மரத்துக்கு நான் போய் விட்டால் என்னைப்போல் மகாபாவி வேறு யாரும் உண்டோ? என் மனம் பதறுகிறதே! என் உயிரையும் இங்கேயே விடுவேன்" என்று பிரலாபித்தது. பிறகு அது, தான் இருந்த பொந்திலேயே உட்கார்ந்திருந்தது.

கொஞ்ச காலம் சென்ற பிறகு, தேவலோகாதிபதியாகிய தேவேந்திரன் அவ்வழி

யாகச் செல்லலானுன். அப்பொழுது ஆகார மில்லாமல் கவலேயால் வாடிப் பொந்திலிருந்த கிளியைப் பார்த்தான். அவனுக்கு ஆச்சரியம் உண்டாகியது. அவன் அக்கிளியை நோக்கி, “ஏ கிளியே! நீ ஏன் ஆகாரமில்லாமல் இந்தப் பாழும் மரத்தில் இருக்கின்ருய்? இக்காலத் தில் எவ்வளவோ ருசிகரமான கனிகளோடு கூடிய மரங்கள் இல்லேயா? அங்குச் சென்று சௌக்கிய மாய் இருக்கலாகாதா?” என்ருன்.

கிளி, தேவேந்திரனே நோக்கி நடந்தவற்றை யெல்லாம் கூறியதுடன் தான் சாகுமளவும் அந்தப் பட்டுப்போன மரத்திலேயே இருக்கப் போவதாகவும் கூறிற்று.

அதைக் கேட்ட தேவேந்திரன் மிக்க மகிழ்ச் சியை அடைந்து அந்தக் கிளியின் விசுவாசத்தை மெச்சினுன்; பட்டுப்போன மரத்தைத் தளிர்க்கும் படிச் செய்து கிளியையும் வாழ்த்திச் சென்ருன். அக்கிளி பேரானந்தத்தோடு பல நாட்கள் அம் மரத்திலேயே வசித்தது.

1. வேடன் மரக்கிளேகளில் சில பக்ஷிகளேப் பார்த்த வுடன் என்ன செய்தான்? (2) வேடன் அம்பை எய்த பொழுது ஒரு கிளி மாத்திரம் என்ன செய்தது? (3) ஓடிப் போன கிளிகள் அந்த மரத்திற்கு ஏன் திரும்பவில்லே? (4) தேவேந்திரன் மரத்துக்கிளியைப் பார்த்ததும் என்ன சொன்

ஞன்? (5) ஏன் அந்தக் கிளி மரப்பொந்தை விட்டுப் போகவில்லை?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க :—

(1) வேடன் பல ——அம்மரத்தை நோக்கி எறிந்தான். (2) தேவேந்திரன் அந்தக் கிளியினிடத்திலுள்ள——மெச்சிஞன். (3) —— அம்புகள் தைத்ததால் அம்மரம் வாடிக் கொஞ்ச காலத்திற்குப் பின்......

---

13. பிச்சைக்காரர்கள்

பிள்ளைகளே! நீங்கள் தெருக்களில், "ஐயா, பிச்சை போடுங்கள்" என்று கூவிக்கொண்டு வரும் பிச்சைக்காரர்களைப் பார்த்திருப்பீர்கள். பிச்சைக்காரர்கள் பிறரிடம் சென்று பல்லைக்காட்டி, அவர்கள் தயவிஞல் கொடுக்கும் அரிசியையோ அல்லது சோறு முதலியவைகளையோ பெற்றுக் கொண்டு போய் ஜீவனம் செய்கிருர்கள். பிச்சை எடுப்பது மிகவும் இழிவான காரியம். பிச்சைத் தொழிலுக்கு முக்கிய காரணம் வறுமையாகும். தானே சரீரப் பிரயாசைப்பட்டு உழைக்க முடியாத ஏழைமக்கள் பிச்சை யெடுத்துப் பிழைக்க வேண்டியிருக்கிறது.

இக்காலத்தில் வெகு சுலபமான வழியெனக் கருதிப் பல சோம்பேறிகள் பிச்சை யெடுப்பதைக்

கைக்கொள்ளுகிருர்கள். பிச்சைக்காரர்களில் பல வகையினர் உண்டு. அவர்களில் சிலரைப்பற்றிக் கவனிப்போம்.



பரம்பரைப் பிச்சைக்காரர்கள் :—இவர்கள் தலைமுறை தலைமுறையாகப் பிச்சை யெடுக்கும் தொழிலையே கைக்கொண்டவர்கள். இவர்கள் சாதாரணமாய் நல்ல திட சரீரமுள்ள ஸ்திரீகளும் புருஷர்களுமாகவே காணப்படுகிருர்கள். இவர்களை நோக்கி, “ நீங்கள் ஒரு நல்ல கைத்தொழிலை ஏன் செய்யக் கூடாது?” என்று கேட்டால், அதற்கு அவர்கள், “ ஐயா, நாங்கள் பிச்சைக்காரன் வயிற்றில் பிறந்திருக்கிருேமே! எங்கள்

குலத்தொழிலை விடலாமா? எங்களுக்கு வேறு தொழிலும் வருமா?" எனக் கூறுகிறார்கள்.

சோம்பேறிப் பிச்சைக்காரர்கள் :—இவர்களும் நல்ல திட சரீரமுள்ளவர்களாகவே இருப்பார்கள். ஆனால், அவர்கள் கடினமான வேலைகளைச் செய்ய விரும்புகிறதில்லை; வெகு சுலபமாகச் சம்பாதிக்கக்கூடிய பிச்சை எடுத்தலையே கைக் கொள்ளுகிறார்கள். அவர்களில் ஒருவனை விசாரித்தால் அவன், கஷ்டப்பட்டு வேலை செய்ய முடியாது என்றாவது அல்லது வேறு ஏதாவதொரு பொய்க்காரணமாவது கூறுகிறான்.

சுயநலப் பிச்சைக்காரர்கள் :—சிலர் தங்கள் வீடுகளில் உள்ளவர்களோடு சண்டையிட்டுக் கொண்டும் கோபங் கொண்டும் வெளியில் போய்ப் பிச்சை எடுக்கிறார்கள்.

உண்மையான பிச்சைக்காரர்கள் :—தீராத வியாதியஸ்தர்களும், எவ்வழியிலும் சம்பாதிக்கக் கூடாத நிலைமையில் உள்ள திக்கற்றவர்களும், அநாதர்களும் பிச்சை யெடுத்துத்தான் சாப்பிட வேண்டியதாக இருக்கிறது.

காரணம் யாதாயிருந்தபோதிலும் பிச்சை யெடுத்து உயிர் வாழ்தல் மிகவும் இழிவானது. அதை அறவே ஒழிக்கவேண்டியது ஒவ்வொரு

வரின் கடமையாகும். நமது தேசத்தில் இவ்விதப் பிச்சை யெடுக்கும் தொழில் விருத்தியாகி வருகிறது. அன்னிய நாடுகளிலெல்லாம் இத்தொழில் கூடாது என்று சட்டம் செய்திருக்கிறார்கள்; பிச்சை யெடுப்பவனைப் பிடித்துச் சிறையில் அடைத்துவிடுகிறார்கள். ஒவ்வொருவனும் ஏதாவதொரு தொழில் செய்யவேண்டும். தொழில் கிடைக்காவிட்டால் சர்க்கார்த் தொழிற் சாலையிலாவது சேரவேண்டும். நம்முடைய நாட்டிலும் அநேக தனவந்தர்கள் கூடிச் சில இடங்களில் "பிச்சைக்காரர்கள் விடுதிகள்" என்று ஏற்படுத்தி, பிச்சைக்காரர்களுக்கு அன்ன வஸ்திரம் கொடுத்துச் சிறு கைத்தொழிலைக் கற்றுக்கொள்ளும்படி செய்கிறார்கள். பிச்சையெடுக்கும் இழிவான தொழில் நம் நாட்டினின்றும் தொலையவேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்திப்போமாக.

கேள்விகள்:—

(1) சிலர் ஏன் பிச்சை எடுக்கின்றனர்? (2) பிச்சைத் தொழிலை நீக்குவதற்குச் சில தனவான்கள் என்ன செய்திருக்கிறார்கள்? யாருக்கு பிச்சை போடுவது தருமம் ஆகும்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்கவும்:—

(1) பிச்சையெடுப்பது மிகவும்......காரியம். (2) பிச்சைத் தொழிலுக்கு......முக்கிய காரணமாகும். (3) பல

சோம்பேறிகள் பிச்சை யெடுப்பதை......ஒழிக்கவேண்டியது ஒவ்வொருவரின்... ...யாகும்.

---

14. கடிகாரம்

நீங்கள் பாடசாலைக்குப் புறப்படவேண்டிய நேரத்தைத் தெரிந்துகொள்வதற்கு உங்கள் வீடுகளிலுள்ள கடிகாரத்தைப் பார்க்கிறீர்களல்லவா? கடிகாரம் என்றாலென்ன? அது எவ்வாறு நமக்கு உதவுகிறது? காலத்தை அளந்து கணக்கிடுங் கடிகாரமாம்.

இதோ தெரிவது ஒரு பெரிய கடிகாரத்தின்



படம். மேலே ஒரு வட்டமான வெண்ணிறமுள்ள தகடு காணப்படுகிறது. அதற்கு "டயல்" என்று பெயர். கீழே ஒரு கருவி இப்படியும் அப்படியும் அசைந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பெண்டுலம் என்று பெயர். இம்மாதிரி பெண்டுலம் உள்ள கடிகாரங்கள் தான் அநேகமாய் மணியடித்துக் காட்டும்.

இப்போது டயலைப்பற்றி ஆராய்வோம். டயலின் சுற்றுக் காலில் I, II, III, IV, V, VI, VII, VIII, IX, X, XI, XII என்ற பன்னிரண்டு எண்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவை உங்களுக்குத் தெரிந்த 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12 என்ற எண்களின் வேறு உருவமேயாம். அவை களுக்கு ரோமன் எண்கள் எனப் பெயர். டயலின் உச்சியில் XII என்ற எண் இருக்கக் காண்கிறோம். இதைக் கவனித்துக் கொள்ளுங்கள். பின்னர், டயலின் சுற்று வட்டத்தில் மிகச் சிறு கோடிட்ட கட்டங்கள் இருக்கின்றன. மொத்தம் அறுபது சிறு கட்டங்களும் பன்னிரண்டு எண்களும் இருக் கின்றன. டயலின் மேல் இரண்டு முட்கள் இருக் கின்றன. ஒன்று சிறியதாகவும் மற்றொன்று பெரியதாகவும் இருக்கிறதைப் பாருங்கள். சிறிய முள்ளுக்கு மணி முள் என்றும் பெரிய முள்ளுக்கு நிமிஷ முள் என்றும் பெயர். மேலே சொன்ன எண்கள் பன்னிரண்டும் மணியைக் காட்டுகின் றன. சிறிய கட்டங்கள் அறுபதும் நிமிஷங் களைக் காட்டுகின்றன.

கடிகாரத்தின் உள்ளிருக்கும் இயந்திரம் வேலை செய்வதனால் டயலின் மேலுள்ள முட்கள் இரண்டும் வலமாகச் சுற்றி வருகின்றன. நிமிஷ முள் டயலை ஒருதரம் சுற்ற ஒரு மணி நேரம் ஆகிறது. மணி முள் ஒரு எண்ணிலிருந்து மற்

ஞெரு எண்ணிற்கு வர ஒரு மணி நேரமாகிறது. டயலின் உச்சியில் பன்னிரண்டு என்ற எண் இருக்கிறதல்லவா? ஒரு மணி அடிக்கும்போது நிமிஷ முள் பன்னிரண்டாவது இலக்கத்தின் மேலும், மணி முள் ஒன்று என்ற இலக்கத்தின் மேலும் இருக்கும். நிமிஷ முள் பன்னிரண்டிலிருந்து புறப்பட்டு ஒரு தரம் சுற்றி மறுபடியும் பன்னிரண்டின் மேல் நிற்கையில், மணி முள் ஒன்றிலிருந்து நகர்ந்து இரண்டின் மேல் வந்து நிற்கும். அப்போது கடிகாரம் இரண்டு மணி அடிக்கும்.



டயம்பீஸ்

இவ்வாறு நிமிஷ முள்ளும் மணி முள்ளும் சுற்றிச் சுற்றி வந்து மணி நேரத்தைக் காட்டுகின்றன.

டயலின் ஓரங்களில் அறுபது சிறிய கட்டங்கள் இருக்கின்றன என்று முன்னமே சொன்ளே

மல்லவா? ஒரு மணி நேரத்தில் நிமிஷ முள் ஒருதரம் சுற்றி வருவதால் ஒரு மணிக்கு அறுபது நிமிஷங்கள் எனப் புலப்படுகிறது. டயலில் பன்னிரண்டு எண்கள் குறிக்கப்பட்டு இருப்பதனுல் ஒரு எண்ணுக்கும் மற்ருெரு எண்ணுக்கும் இடையில் உள்ளவை ஐந்து நிமிஷங்கள் எனவும் புலப்படுகிறது. ஒரு மணி அடித்தவுடன் இரண்டு முட்களும் நகர ஆரம்பிக்கின்றன. மறு மணி அடிக்கு முன் இரண்டு முட்களும் பல எண்களின் மேல் நகர்ந்து வரக்கூடும். ஆங்காங்கு முட்கள் இருக்கும் இடத்தை நோக்கி அப்போதைக்கப் போது மணி சொல்லவேண்டும். உதாரணமாக, ஒரு மணி அடித்தபிறகு மணிமுள் ஒன்றைவிட்டு நகர்கிறது; நிமிஷமுள் பன்னிரண்டை விட்டு நகர்கிறது. இது, ஒன்றின் மேல் வருங்காலத்தில் ஒருமணி அடித்து ஐந்து நிமிஷமாகிறது என்று சொல்லுகிருேம். மூன்றின்மேல் வருங்காலத்தில் ஒருமணி அடித்துப் பதினைந்து நிமிஷமாகிறது என்று சொல்லுகிருேம்; ஒன்றேகால் மணி என்றும் சொல்லலாம். பெரிய முள் ஆறின்மேல் வரும்போது ஒரு மணியடித்து முப்பது நிமிஷம் என்ருவது அல்லது ஒன்றரை மணி என்ருவது சொல்லுகிருேம். நிமிஷ முள் ஒன்பதின்மேல் வரும்போது ஒன்றே முக்கால் மணி என்று சொல்கிருேம்; அல்லது இரண்டு மணியடிக்கப் பதி

ஊ ந்து நிமிஷங்கள் இருக்கின்றன என்றும் சொல்லுகிறோம். பதினொன்றின்மேல் வரும்போது இரண்டு மணி யடிக்க ஐந்து நிமிஷங்கள் இருக்கின்றன என்றும் சொல்லுகிறோம். இம்மாதிரியாக மற்ற மணிகளுக்கும் கால், அரை, முக்கால் முதலிய மணி நேரங்களை அறிந்து கொள்ளலாம்.

கடிகாரங்களில் பல வகை உண்டு. மேல் பார்த்தது மணியடிக்கும் பெரிய கடிகாரம். கீழே யுள்ள படத்தில் காட்டியிருப்பது சிறிய கடி



கடிகாரம். இதை ஆங்கிலத்தில் வாட்ச் என்று சொல்லுவார்கள். இதில், சட்டைப் பையில் போட்டுக் கொள்ளும்படியாகவும், கையில் கட்டிக் கொள்ளும்படியாகவும் இருவிதம் உண்டு. இச்சிறிய கடிகாரங்களில் மேல் சொன்ன மணி முள், நிமிஷ முள் இவைகளைத் தவிர மூன்றாவதாக ஒரு சிறிய முள்ளைக் காணலாம். அதற்கு வினாடி முள் என்று பெயர். இந்த வினாடி முள் ஒரு நிமிஷத்தில் ஒரு

தரம் சுற்றும். ஒரு நிமிஷத்திற்கு அறுபது விநாடிகள் உண்டு.

இன்னும் மேஜையின்பேரிலும் சுவரிலுள்ள மாடங்களிலும் வைக்கக் கூடிய சில கடிகாரங்கள் உண்டு. அவைகளுக்கு டயம்பீஸ் என்று பெயர்.



கடிகாரங்களைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்தில் நிதானமாகச் சாவி கொடுத்து, அழுக்கு தூசி முதலியன படியாமல் வைத்திருந்தால், அவை நீண்டகாலம் உழைக்கும்.

கேள்விகள்:—

(1) ஒரு கடிகாரத்தில் டயல், பெண்டுலம் என்பன யாவை? (2) டயலின் மேலுள்ள இருமுட்களுக்கு என்ன பெயர்? (2) நிமிஷமுள் ஒரு தடவை சுற்றி வந்தால் மணி முள் எவ்வளவு தூரம் சுற்றுகிறது? (4) நிமிஷ முள் 12 என்ற எண்ணிலும் மணிமுள் 3 என்ற எண்ணிலும் இருந்தால் நேரம் என்ன? (5) காலை எட்டேமுக்கால் மணிக்கு மணிமுள் எங்கிருக்கும்? நிமிஷமுள் எந்த எண்ணைக் குறிக்கும்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) காலத்தை அளந்து கணக்கிடும்——கடிகாரம். (2) சிறிய முள்ளுக்கு——முள் என்றும், பெரிய முள்ளுக்கு——முள் என்றும் பெயர். (3) ஒரு மணிக்கு——நிமிஷங்கள். (4) டயலில்——எண்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. (5) ஒன்றே முக்கால் மணியாக இருந்தால் மணி முள்——எண் காட்டும்; நிமிஷ முள்——எண் காட்டும்.

---

15. பொறுப்புள்ள வேலைக்காரன்

செல்வத்திற் சிறந்த சீமான் ஒருவர் தமக்கு ஒரு வேலைக்காரன் வேண்டுமென்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தார். அதைக் கேள்விப்பட்ட பலர் அவருக்கு மனுக்கள் அனுப்பினர். அந்தச் சீமான் அவைகளில் மூன்று மனுக்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு மீதியைத் தள்ளி விட்டார்; அந்த மூன்று மனுதார்களையும் தம் முன்பாக நேரில் ஆஜராகும்படி ஒரு தேதியையும் மணியையும் குறிப்பிட்டுக் கடிதமும் அனுப்பினார்; அவர்கள் வருங் காலத்தில் அவர்களைச் சோதிக்க வேண்டியதற்காக வாசற்படியண்டைத் தம்முடைய மேல் சட்டையைப் போட்டு வைத்தார்.

முதலில் வந்த மனுதாரன் அந்தச் சட்டையைத் தாண்டிக் கொண்டு போய்ச் சீமான் எதிரில் நின்றான். வேலையைச் சரிவரச் செய்ய

மாட்டான் எனக் கருதி, அவர் இவனை அனுப்பி விட்டார்.

இரண்டாவதாக வந்த மனுதாரன் வழியில் கிடந்த சட்டையைக் காலால் உதைத்துத் தள்ளி விட்டு வந்தான். "இவன் ஒரு சோம்பேறி; உடம்பு வணங்கி வேலை செய்யமாட்டான்" என நினைத்து, அவர் இவனையும் அனுப்பிவிட்டார்.



மூன்றாவதாக வந்த வேலைக்காரன் வழியில் கிடந்த சட்டையை எடுத்துத் தூசியைத் தட்டிச் சமீபத்திலிருந்த கோட்டு ஸ்டாண்டில் மாட்டி விட்டு, அத் தனவானின் முன் போய் வணங்கி நின்றான். இதைப் பார்த்த செல்வச் சீமான்

"இவனே நல்லவேலைக்காரன்; நல்லறிவு வாய்ந்தவன்; தன் கடமையை உணர்ந்தவன்; கஷ்டப்பட்டு வேலை செய்யக்கூடியவன்" என்று எண்ணி, இவனையே தம் வீட்டில் வேலைக்கு வைத்துக் கொண்டார்.

கேள்விகள்:—

(1) சீமான் மனுதார்களைச் சோதிக்க என்ன செய்தார்? (2) அவர் முதல் இரண்டு மனுதார்களை வேலை கொடுக்காமல் ஏன் அனுப்பிவிட்டார்? (3) மூன்றாவதாக வந்த வேலைக்காரனை அவர் ஏன் வேலையில் வைத்துக்கொண்டார்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) ஒரு சீமான்——விளம்பரம் செய்திருந்தார். (2) அநேகம் அச்சீமானுக்கு —— அனுப்பினர். (3) அவர் வாசற்படியண்டை தம்முடைய—யைப் போட்டு வைத்தார்.

---

16. பழமொழிகள்

1. அவனன்றி ஓரணுவு மசையாது. [நலம்.
2. கல்லாதார் செல்வத்திலும் கற்றோர் வறுமை
3. தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்.
4. தோட்டி போலுழைத்துத் துரைபோல் சாப் [பிடவேண்டும்.
5. நடந்தால் நாடெல்லா முறவு;
   படுத்தால் பாயும் பகை.
6. தன் பலங்கொண்டு அம்பலம் ஏறவேண்டும்.

7. கந்தையானாலும் கசக்கியுடுத்து;
கூழானாலும் குளித்துக் குடி.
8. அன்பான சிநேகிதனை ஆபத்திலே அறி.
9. எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?
10. எல்லாரும் மனிதரா? கல்லெல்லாம் மாணிக்கமா?
11. எளியாரை வலியார் அடித்தால்
வலியாரைத் தெய்வம் அடிக்கும்.
12. மனக்கவலை பலக் குறைவு.
13. இறைத்த கிணறு ஊறும்;
இறைக்காத கிணறு நாறும்.
14. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
15. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

கேள்விகள்:—

(1) பழமொழி என்பதற்கு என்ன பொருள்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) அன்பான சிநேகிதனை—அறி. (2) கல்லாதார் செல்வத்திலும்——நலம். (3) வல்லவனுக்கு——ஆயுதம்.

---

17. சிலந்தி

நம்முடைய வீடுகளிலும் தோட்டம் தோப்பு முதலிய இடங்களிலும் சிலந்திப் பூச்சிகள் கூடு கட்டிக் கொண்டு வசிக்கின்றன. சிலந்திப் பூச்சி தன் வாயிலிருந்து வரும் ஒருவகைப் பசை

போன்ற ஒரு வஸ்துவினுல் மெல்லிய நூல் தயாரித்து, அதனுலே தன் கூட்டைக் கட்டிக் கொண்டு வாழ்கின்றது. சிலந்திகள் எல்லாம் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.



சிலந்தி

சிலந்தியில் பல வகை உண்டு. அவைகளில் சில கூடுகளில் வாசம் செய்யும்; சில செடி-கொடிகளின் இலை தழைகளில் இருந்து கொண்டு

அங்குமிங்கும் ஓடியாடி இரை தேடும். அவை களில் பறக்கும் சிலந்தியே மிக்க ஆச்சரியமானது.

பறக்கும் சிலந்திக்குச் சிறகுகள் இல்லை. அப்படியிருந்தும், அது ஆகாயத்தில் அதிக உயரம் பறக்கும். மற்ற சிலந்திகளைக் காட்டிலும் பறக்கும் சிலந்தியின் உடல் மிகவும் இலேசாக வும் சிறியதாகவும் இருக்கும்.

ஆனால், அது எப்போதும் பறக்காது; தனக்கு இஷ்டம் வந்தபோதுதான் பறக்கும். அது முதலில் ஒரு செடியில் உட்கார்ந்துகொண்டு தன் உடலை மேலே தூக்குகிறது; தன் வாயி லிருந்து ஒருவகைப் பசையை வெளியே கொஞ் சம் கொஞ்சமாகத் தள்ளி, அதை மெல்லிய நூல் பந்துபோல் செய்கிறது. பஞ்சுபோல் மெதுவான அவ்வஸ்து அதிகமாக வெளியே வந்தவுடன், அது காற்றை விட மிகவும் இலேசாக விருப்ப தால் காற்றில் பறக்க ஆரம்பிக்கிறது. அதன் உதவியைக்கொண்டு சிலந்தியும் பறக்கிறது.

சிலந்தி பறந்தது போதும் என்று நினைத் தால் மேலே சொன்ன பஞ்சுப் பந்தைப் பிரித்துக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்க ஆரம்பிக்கிறது. தன் உடலின் கனத்தால் கொஞ்சம் கொஞ்சமாகச் சிலந்தி கீழே இறங்கி விடுகிறது.

சிலந்திகளின் கூடுகள் வெகு விசித்திரமாக இருக்கின்றன. மிகவும் மிருதுவான நூல்களி னுல் வலை போன்ற கூடுகளைக் கட்டி வாழ்கின்றன. அக் கூட்டின் மேல் கொசுக்களும், ஈக்களும், இன்னும் பல வகைச் சிறு பூச்சிகளும் வந்து உட்காருவதுண்டு. அவ்விதம் உட்கார்ந்த வுடன் அவைகளின் கால்கள் அவ் வலைகளில் சிக்கிக் கொள்ளுகின்றன; அவைகளினின்றும்



பறக்குஞ் சிலந்தி

விடுவித்துக் கொள்ள முடியாமல் அவைகளி லேயே மாண்டு விடுகின்றன. அவ்விதம் இறந்த வைகளே அக் கூட்டிலுள்ள சிலந்திக்கு ஆகார மாகின்றன.

சிலந்திகள் புதர்களில் உள்ள கொம்புகளி லும் கொல்லைகளில் உள்ள வேலிக் குச்சிகளிலும் வெகு அழகாகக் கூடுகள் கட்டி வசிக்கும். நமது வீடுகளில் ஈ அதிகமாய் உபத்திரவப்படுத்தினல் மேலே சொன்ன சிலந்திக் கூடுகளை ஒடித்துக் கொண்டு வந்து ஈ மொய்க்கும் இடங்களில் இங்கு மங்கும் வைக்கலாம். ஈக்கள் எல்லாம் அக்கூடு களில் வெகு உல்லாசமாக உட்காரும்; திரும்பிப் போகமுடியாமல் அவைகளில் உள்ள சிலந்திக்கு இரையாகும். ஆகவே, ஈக்களைத் தொலைக்க இது வும் ஒரு சிறந்த முறையாம்.

கேள்விகள்:—

(1) சிலந்தி தன் கூட்டை எப்படிக் கட்டிக்கொள்ளு கிறது? (2) சிலந்திகளில் சில வகைகளைச் சொல்லுக? (3) ஒருவகைச் சிலந்தி எப்படிப் பறக்கிறது? (4) சிலந்தி கீழே இறங்க என்ன செய்கின்றது? (5) சிலந்திப் பூச்சிக்கு உணவு எது?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) பறக்கும் சிலந்திக்கு——இல்லை; ஆயினும் அது அதிக——பறக்கும். (2) சிலந்திகளின் கூடுகள் வெகு—— இருக்கின்றன. (3) ஈக்களின் கால்கள் வலைகளில்——.

---

18. கண்

இவ்வுலகத்திலுள்ள பொருள்களை நாம் நமது கைகளினுல் தொட்டுப் பார்த்து உணருகிறோம்;

நாக்கினுல் வஸ்துக்களைச் சுவைத்து அறிகிருேம்; காதுகளினுல் ஒலியைக் கேட்கிருேம்; மூக்கினுல் வாசனை முகர்கிருேம்; கண்களினுல் பொருள் களின் உருவம், அழகு; நிறம், அமைப்பு இவ ற்றை ஒருங்கு பார்க்கிருேம். மெய், வாய், கண், மூக்கு, செவி இவை ஐந்தும் ஐம்பொறிகள் எனப் படும். இவைகளின் மூலமாய் நிகழும் காரியங் களான ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை இவை கள் ஐந்தும் ஐம்புலன்கள் எனப்படும்.

ஐம்பொறிகளில் மிகவும்முக்கியமானது கண்; ஏனெனில் கண்ணில்லாதவன் எதற்கும் உதவ மாட்டான். கண் மிகவும் சிறந்த உறுப்பான படியால் அதைக் கடவுள் மிகவும் பாதுகாப்பான இடத்தில் அமைத்திருக்கிருர். முகத்தில் புருவம் மூக்கு, கன்னம் இவைகளுக்கு இடையில் கண் அமைக்கப்பட்டிருக்கிறது.

கண்ணின் மேல் உள்ள புருவத்தில் உரோ மம் இருப்பதைப் பாருங்கள். மேலே இருந்து வரும் வியர்வை நீரையும் அழுக்கையும் கண்ணுக் குப் போகாதபடி புருவம் தடுக்கிறது. கண் ஒரு உருண்டையான பந்துபோல் கண் குழியில் வைக் கப்பட்டிருக்கிறது. இந்த உருண்டையைக் காப்ப தற்கு மேலே இரண்டு மூடிகள் இருக்கின்றன. அவைகளுக்கு இமைகள் எனப் பெயர். மேலிமை

அடிக்கடி தானுகவே ஆடிக்கொண்டிருக்கிறது. கீழிமை இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு மேலிமை தன்னிடம் வரும்பொழுது அதனுடன் சேருகிறது. இவ்விரு இமைகளும் ஏன் இவ்வாறு கீழுமேலுமாக அமையவேண்டும்? கண் உருண்டையைச் சுற்றிலும் தானுகவே ஒரு வகை நீர் உற்பத்தியாகிறது; எப்போதும் கண் உருண்டை உருண்டுகொண்டிருக்க வேண்டியதற்காக அதைக் குளிர்ச்சியாகவே வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நீர்ப்பசை வெளிக் காற்றினுல் உலர்ந்து விடாவண்ணம் இமைகள் அடிக்கடி அசைந்து கொண்டிருக்கின்றன. மேலும், இமைகளின் நுனியில் உரோமங்கள் இருக்கின்றன. அவைகளும் அடிக்கடி கண்ணிற்குள் தூசி சேரா வண்ணம் கண்ணைக் காப்பாற்றுகின்றன.

வெண்ணிறமான கண் உருண்டையைக் கவனிப்போம். நடுவில் வட்டமான கரு விழி இருக்கிறது. கருவிழிக்குள் இன்னும் உற்று நோக்கினுல் நடுவில் ஒரு சிறு துவாரம் தெரிகிறது. அதன் பின்னே கண்ணுடி போன்ற ஒரு கருவியும் அதற்குப் பின்னுல் திரை போன்ற மற்ெருரு கருவியும் தோன்றுகின்றன. நாம் ஒரு வஸ்துவைப் பார்க்கும்போது அதன்மேல் விழும் வெளிச்சம் கருவிழியிலுள்ள துவாரத்தின் வழியாக நுழை

ந்து, கண்ணாடிபோன்ற வஸ்துவின் மூலமாய்த் திரைமீது விழுகிறது. அப்போதுதான் நாம் அப்பொருளைக் காண்கின்றோம்.

கண்ணின் பல பாகங்களும் மிக நுட்பமானவை. அவைகளில் ஏதாவது ஒன்று கெட்டுப்போனாலும் பார்வை குன்றிவிடும். ஆகையால், நாம் கண்ணை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். சுத்த ஜலத்தைக் கொண்டு கண்ணை அடிக்கடி நன்றாகச் சுத்தம் செய்யவேண்டும். வெளிச்சக் குறைவான இடத்தில் புஸ்தகம் முதலியவைகளைப் பார்க்கலாகாது; புஸ்தகங்களைச் சுமார் பன்னிரண்டு அங்குல தூரத்தில் பிடித்துக் கொண்டு படிக்கவேண்டும்.

கேள்விகள் :—

(1) ஐம்பொறிகள் யாவை ? (2) கண்ணைக் காப்பதற்கு உள்ள இரண்டு மூடிகளுக்கும் என்ன பெயர் ? (3) இமைகள் கண்ணை எப்படிக் காப்பாற்றுகின்றன? (4) கண்ணில் கருவிழி எங்கு இருக்கின்றது ?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க :—

(1) மூக்கினால் வாசனையை —— (2) கண் இல்லாதவன் ——(3) இமைகள் —— அசைகின்றன. (4) கண்ணின் பல பாகங்களும் மிக——.

19. பவுண்டு

நம் வீடுகளிலுள்ள ஆடு மாடுகள் சில சமயங்களில் காணுமல் போகின்றன. அப்போது நாம் அவைகளை அங்குமிங்கும் போய்த் தேடிப் பார்க்கிறோம். யாராவது பவுண்டில் அவைகளை அடைத்துவிட்டார்களோ வென்று கடைசியாய் அங்கேயும் போய்ப் பார்க்கிறோம். பவுண்டு என்ருல் என்ன?

கேள்வியில்லாமல் தாமாகவே அலைந்து திரிந்து பிறருடைய பயிர் பச்சைகளை யழிக்கும் ஆடு மாடு முதலிய மிருகங்களை அடைத்து வைப்பதற்காகச் சர்க்காரால் கட்டப்பட்ட ஓரிடத்துக்குப் பவுண்டு அல்லது பட்டி என்று பெயர். சிலர் அதை "வாடி" என்றும் சொல்லுவார்கள்.

பவுண்டுகள் ஆங்காங்குக் கிராமங்களிலும் பட்டணங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பவுண்டும் அந்தந்த வட்டம் கிராம முனிசீப்பின் பார்வையில் இருக்கும். சிலவிடங்களில் அதற்காகத் தனி உத்தியோகஸ்தரும் உண்டு. தாசில்தார் அதற்கு மேல் அதிகாரி. பவுண்டுக்குள் அடைக்கப்படும் மிருகங்களைப் பற்றியும், வெளி விடப்படும் மிருகங்களைப்பற்றியும், பவுண்டின் வரவுசெலவுகளைப் பற்றியும் தக்க தஸ்தாவேஜிகள் தயாரிக்கப்படுகின்றன.

பிறர் பயிரைக் கேள்வி முறையின்றி அழிக்கும் ஆடுமாடுகளை யார் வேண்டுமானாலும் ஓட்டிக் கொண்டுபோய்ச் சமீபத்திலிருக்கும் பவுண்டில் அடைத்துவிடலாம். புதிதாக ஒரு மனிதன் ஒரு மிருகத்தைப் பவுண்டில் அடைத்தவுடன், பவுண்டை நடத்தி வருகிறவர் அம்மிருகத்தைத் தாம் ஒப்புக்கொண்டதற்கு அத்தாக்ஷியாக ஒரு ரசீது கொடுப்பார். அதற்கு சர்க்கார் செலவில் தீனி போடப்படும். வந்த மிருகத்தைப்பற்றிக் கணக்கிலும் பதிவு செய்யப்பட்டிருக்கும். அதன் சொந்தக்காரன் வந்து கேட்கும்போது, அவர் தீனிச் செலவையும் அம் மிருகத்தினால் ஏற்பட்ட நஷ்டத்துக்காக அபராதத்தையும் வாங்கிக் கொண்டு அதை அவனிடம் ஒப்புவிப்பார்.

ஒரு மிருகம் பவுண்டில் அடைக்கப்பட்டது முதல் பதினைந்து தினங்களுக்குள் அதன் சொந்தக்காரன் வந்து அதை ஓட்டிப் போகவேண்டும். இல்லாவிடில், அம் மிருகத்தை அதிகாரிகள் ஏலம் போட்டு விற்பார்கள் ; அதில் வரும் தொகையைச் சர்க்காருக்கு ஆதாயம் செய்வார்கள்.

பவுண்டில் , ஆடு, மாடு, குதிரை, கழுதை, பன்றி, யானை, ஒட்டகம் முதலிய எல்லா கால்நடைகளையும் அடைப்பார்கள்.

பவுண்டு அதிகாரிக்கு அவர் செய்யும் வேலைக்குத் தனியாக சம்பளம் கிடையாது. ஆனால் அவருக்குப் பவுண்டு வருமானத்துக்குத் தக்க கமிஷன் கிடைக்கும். அதாவது, பவுண்டில் அபராதமாக வசூலாகும் பணத்தில் ஒரு பாகத்தைச் சர்க்காரார் அவருக்குக் கொடுப்பார்.

கேள்விகள் :—

(1) பவுண்டு என்பது என்ன? ஏன் அதைச் சர்க்கார் கட்டி வைத்திருக்கின்றனர்? (2) பவுண்டு ஒவ்வொரு கிராமத்திலும் யார் பார்வையில் இருக்கிறது? (3) பவுண்டில் அடைபட்ட மிருகத்தை எத்தனை நாட்களுக்குள் அதன் சொந்தக்காரன் ஓட்டிப் போகவேண்டும்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க :—

1. ஒரு மிருகம் —— போனால் அதைப் —— அடைத்து விட்டார்களோ என்று பார்க்கிறோம்? (2) பவுண்டுக்கு —— அல்லது —— என்றும் சொல்வதுண்டு. (3) பவுண்டில் அடைபட்ட மிருகத்திற்குத் —— போடவேண்டியது —— செலவு.

---

20. நல்லாெனுருவனால் நாடு செழிக்கும்

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் மிகக் கொடியவனாயிருந்தான்; தன்னலமொன்றையே கருதினவனாய்த் தன் தேசக் குடிகளிடம் அதிக வரியைச் சுமத்தினான்; வரி கொடுக்க முடியாத

ஏழைகளையெல்லாம் அதிக இம்சை செய்து வந்தான். ஜனங்கள் எல்லோரும் மிக வருந்தி, என்ன செய்வதென்று அறியாமல் தவித்து நின்ருர்கள்.

ஒரு ஏழைக் குடியானவன் தனக்கு ஏற்பட்ட வரியைப்பற்றி யோசித்து, "ஐயோ! இவ்வரியைக் கொடுக்க எனக்குக் கொஞ்சமும் சக்தியில்லையே! என் கையில் ஒருபைசாக்கூட இல்லையே; சாப்பாட்டுக்கு வழியில்லாமல் என் பெண்சாதி பிள்ளைகளெல்லாம் தவிக்கின்றனரே; நான்கு நாளாகப் பட்டினி கிடக்கிருேமே; என்ன செய்வேன்?" என்று வருந்தினுன்.

அக் குடியானவன் பலவிதமாக யோசித்துக் கடைசியில் அரசனிடம் சென்று வணங்கி நின்ருன். குடியானவன் "அரசே! நான் என் செய்வேன்? தாங்கள் விதித்திருக்கும் வரிச்சுமையைத் தாங்க முடியவில்லையே. சாப்பாட்டுக்கு வழியில்லாமல் என் வீட்டிலுள்ள எல்லோரும் பட்டினி கிடக்கிருேமே. தேவரீர் திருவுளம் கொண்டு வரியைத் தள்ளி, அடியேனை மன்னிக்கவேண்டும்" என்று கெஞ்சினுன்.

அரசன், "அது முடியாத காரியம். உனக்கு ஏற்பட்ட வரியை நீ அவசியம் செலுத்தவேண்டும். ஒரு பைசாக்கூடக் குறைக்கவுமாட்டேன். வரி தள்ளுபடியும் செய்ய முடியாது" என்ருன்.

குடியானவன், "ஐயோ! எனக்கு வேறு வழி ஒன்றுமில்லை. இங்கேயே என் உயிரை விட்டு விடுகிறேன்" என்றான்.

அரசன், "அடே முண்டமே! நீ என் இராஜ்யத்தை விட்டு ஓடிப்போ" என்று கோபத்துடன் கூறினான்.

குடியானவன் "அரசே! நான் எங்கு செல்வது? குந்தள தேசத்திற்குச் செல்வோமென்றால், அங்கே தங்களுடைய தமையனார் ஆண்டு வருகிறார்; கலிங்க தேசத்துக்குப் போவோமென்றால், அங்கே தங்கள் சிறிய தந்தை அரசாட்சி செய்கிறார். வேறு எந்தத் தேசத்துக்குப் போவோமென்று நான் நினைத்தாலும், அவ்விடங்களில் எல்லாம் தங்களுடைய உறவினர்களாவது அல்லது நண்பர்களாவது அரசுபுரிகிறார்கள். எனக்கு ஒரு வழியும் புலப்படவில்லையே. என்ன செய்வேன்?" என்று சொன்னான்.

அரசன், "அடே முழுமுடமே! இப்புவியில் உனக்கு இடமில்லை. நரகத்துக்குச் செல்" என்று கூறினான்.

குடியானவன், "ஐயனே! அங்கு இதோ செல்லுகிறேன். ஆனால் அவ்விடத்தில் தங்கள் பிதா இருக்கிறாரே!"

இம் மொழிகளைக் கேட்ட அரசன் வெட்கப் பட்டுக் குடியானவன் செலுத்தவேண்டிய வரியை முழுவதும் தள்ளிவிட்டான்; மற்ற ஜனங்கள்மீது விதிக்கப்பட்டிருந்த அதிக வரிகள் எல்லாவற்றையும் நீக்கினன்.

கேள்விகள்:—

(1) இந்தப் பாடத்தால் நீ தெரிந்துகொள்வதென்ன? (2) குடியானவன் ஏன் வரி செலுத்தவில்லை? (3) அரசன் கடைசியில் ஏன் அதிக வரியைத் தள்ளிவிட்டான்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

1. குடியானவன் —— கொடுக்க முடியாமல் —— சென்று வணங்கி நின்றான். 2. குடியானவன் —— தேசத்திற்குச் செல்ல முடியவில்லை. 3. இப் —— உனக்கு இடம் இல்லை; —— ச் செல்.

---

21. கடன் வாங்குதல்

ஒருவனுக்குத் தன்னிடமுள்ள பணத்துக்கு மேல் செலவு ஏற்படுங்காலத்தில், அவன் தனக்கு வரவேண்டிய பணத்திலிருந்து பிறகு கொடுத்து விடலாம் என்று எண்ணிப் பிறரிடம் கடன் வாங்குகிறான். பிறரிடத்தில் கடன் வாங்குதல் எவ்விதத்திலும் நல்லதல்ல.

சிலர் கல்யாண காலங்களிலும் மற்றும் அநேக சமயங்களிலும் ஏராளமாய்ச் செலவு செய்து கடனாளிகளாகிறார்கள். கடன் வாங்கும்போது வெகு சௌகரியமாகத்தான் இருக்கும். ஆனால் அக் கடனைத் திருப்பிக் கொடுக்கும் சமயத்தில் மிக்க மனத் தளர்ச்சி உண்டாகும். ஏனெனில், கடனாக வாங்கின தொகைக்கு மேல் வட்டி ஏறிவிடும். நாட்கள் கழிவன தோன்றுகிறதில்லை. அதனால், "வட்டிக்குத் தூக்கமில்லை" என்ற பெரியோர் வாக்கின்படி, வட்டி அதிகரித்துவிடும். பெரிய பெரிய பணக்காரர்களும் செல்வச் செருக்கினால் ஏராளமாய்க் கடன் வாங்கிவிட்டுக் கடைசியில் தங்கள் சொத்துக்களை யெல்லாம் கடனுக்காகக் கொடுத்துவிட்டு ஓட்டாண்டி யாகிறார்கள்.

பண்டிகை காலங்களில் சில ஏழைகளும் கடன் வாங்கி அதிகச் செலவு செய்கிறார்கள். வட்டி யேறுவதால் கடன் தொகை மிகவும் அதிகரித்துவிடவே, கடனாளிகள் கடனைக் கொடுக்க வழியில்லாமல் வெளி நாடுகளுக்கு ஓடிப்போகவும் நேரிடுகிறது.

கடன் பட்டவனுக்கு வாங்கின கடனைத் தீர்க்கவேண்டுமே என்ற கவலை எப்பொழுதும் இருக்கும். அதற்குத் தகுந்த வரும்படி இல்லையே என்ற கவலையும் ஏற்படும். கடன் கொடுத்தவனைக்

காணும் போதெல்லாம் இவனுக்குச் சிந்தையில் கலக்கம் உண்டாகும். இதே கவலையால் சிலருக்கு வியாதியும் உண்டாவதுண்டு. சிலர் இறுதியில் இறந்து போவதும் உண்டு. கடன் படுவதனால் விளையும் கேடுகளைச் சொல்வது சாத்தியமாகாது.

"ஆனமுதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப் போன திசை
யெல்லார்க்குங் கள்வனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

என்ற ஆன்றோர் வாக்குப்படி வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்பவன் படும்பாடு அதிகம். ஆகையால், 'விரலுக்குத் தக்க வீக்கம்' என்றபடி, ஒவ்வொருவரும் தம் வரும்படிக்குள்ளாகச் செலவு செய்தால் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கலாம்.

கேள்விகள்:—

(1) சில ஜனங்கள் ஏன் கடனாளியாகிறார்கள்? (2) கடன் பட்டவனுக்கு எதனால் கவலை ஏற்படுகிறது? (3) இப்பாடத்திலுள்ள பாட்டிற்குப் பொருள் கூறுக?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

1. —— மிஞ்சி — செய்யக்கூடாது. 2. பிறரிடத்தில் — வாங்குதல் எவ்விதத்திலும் —— அல்ல. 3. சில சமயங்களில் ——மேல்—— ஏறிவிடும்.

22. ஜீரணம்

தினந்தோறும் பல வேளைகளில் நாம் ஆகாரம் சாப்பிடுகிறோம் அல்லவா? அவ்வாகாரம் நமது உடலுக்குள் சென்றபின் என்னவாகிறது என்பதை இப்பாடத்தில் சற்று ஆராய்வோம்.



மேலே இருக்கும் படத்தைக் கவனித்துப் பாருங்கள். அதில் காணப்படும் பல பாகங்களும் நாம் சாப்பிடும் ஆகாரத்தை ஜீரணிக்கும்படி செய்

கின்றன. வாய், தொண்டை, ஆகாரக் குழாய், இரைப்பை, சிறு குடல், பெருங்குடல், ஆசனம் முதலியவைகள் முக்கிய உறுப்புக்களாம். இவை யன்றி நுட்பமான பல உறுப்புக்களும் சேர்ந்து ஜீரணிக்கும் தொழிலைச் செய்கின்றன. மேலே சொன்ன அவயவங்கள் எல்லாவற்றையும் சேர்த்துப் பொதுவாக ஆங்கிலத்தில் "அலிமெண்டரி கனுல்' என்று சொல்லுவார்கள்.

நாம் சாப்பிடும் ஆகாரம் இந்த அவயவங்களில் எவ்வாறு ஜீரணம் ஆகிறது என்பதைக் கவனிப்போம். நாம் ஆகாரத்தை வாயில் போட்டவுடன், பற்கள் அதை நன்ருக மென்று பசையாக்குகின்றன. வாயில் உற்பத்தியாகும் உமிழ் நீருடன் அது கலந்து நாக்கின் உதவியினுல் தொண்டை மூலமாய் ஆகாரக் குழாய்க்குச்செல்லுகிறது. ஆகாரக் குழாய் தன்னிடம் வந்த உணவைக் கொஞ்சம் கொஞ்சமாக இரைப்பையில் சேர்த்து விடுகிறது. இரைப்பையானது எல்லா ஆகாரமும் வந்து சேர்ந்தவுடன் தனக்குத்தானே அழுத்திக் கொள்ளுகிறது. இவ்விதம் அது பல தடவைகள் அழுத்திக் கொள்வதனுல் ஆகாரம் நன்ருகத் திரவ ரூபம் அடைகிறது. இரைப்பையின் பக்கங்களில் உள்ள கல்லீரல், மண்ணீரல் முதலிய உறுப்புக்களிலிருந்து ஒருவித நீர் தயாராகி

இந்த ஆகாரத்தில் விழுகிறது. இரைப்பையிலும் ஒருவித நீர் உண்டாகிறது. எல்லாம் சேர்ந்து ஆகாரத்தைக் கரைத்து நீர் ரூபமாகச் செய்கின்றன. இந்த அன்ன ரசமானது சிறு குடல் வழியாக ஓடுகிறது.

சிறு குடலின் உட்புறத்தில் முட்கள்போன்ற பல சிறிய உறுப்புகள் உண்டு. ஒவ்வொரு முள்ளினுள்ளும் மிகச் சிறிய துவாரமுண்டு. சிறு குடலானது சுமார் முப்பத்திரண்டு அடி நீளமுள்ள ஒரு கொடிபோல் பின்னலாக இருக்கும். மேலே சொன்ன அன்ன ரசமானது அச் சிறு குடல் வழியாக ஓடும்போது, அங்குள்ள முட்கள் அந்த ரசத்திலிருந்து இரத்தத்துக்கு வேண்டிய பொருளை மாத்திரம் இழுத்து இரத்தத்தில் சேர்த்துவிடுகின்றன. மீதியிருக்கும் சக்கையானது பெருங்குடலில் சேர்ந்து ஆசன வாயின் வழியாய் மலமாக வெளிச் செல்லுகிறது. இரத்தத்திலுள்ள கெட்ட வஸ்துக்கள் மூத்திரமாக மாறி வெளிப்படுகின்றன.

நாம் சாப்பிடும் ஆகாரம் நமது தேகத்தைப் போஷிக்க வேண்டிய இரத்தமாக மாறுவதனால் நாம் நல்ல ஆகாரங்களையே சாப்பிடவேண்டும்; உணவுகளும் சுத்தமாயிருக்கவேண்டும்; சாப்பிடும் போது ஆகாரத்தை நன்றாக மென்று தின்ன

வேண்டும் ; ஆகாரத்தைக் காலமறிந்து மிதமாய் உண்ணவேண்டும்.

கேள்விகள்:—

ஆகாரத்தை ஜீரணிக்கச் செய்யும் முக்கிய உறுப்புகள் யாவை? (2) அவ்வுறுப்புகளுக்குப் பொதுவாக ஆங்கிலத்தில் என்ன பெயர்? (3) இரைப்பையில் எப்படி ஆகாரம் திரவ ரூபம் அடைகிறது? (4) சிறு குடல் எதைப்போல் இருக்கிறது? (5) நாம் சாப்பிடும் ஆகாரம் எப்படியிருத்தல் வேண்டும்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) பற்கள் ஆகாரத்தை நன்றாக—பசையாக்குகின்றன. (2) ஆகாரம் ஒரு குழாய் மூலமாய்——யில் சேர்கின்றது. (3) சிறு குடலின் உட்புறத்தில்—போன்ற பல சிறிய— உண்டு. (4) இரத்தத்திலுள்ள கெட்ட வஸ்துக்கள்—மாறி வெளிப்படுகின்றன.

---

23. மின்சார சக்தி

நீங்கள் அநேகமாய்ச் சென்னப்பட்டினத்திற்குச் சென்றிருக்கலாம். அங்கே தெருக்களிலும் ரஸ்தாக்களிலும் நடுவே இரும்புத் தண்டவாளங்கள் புதைக்கப்பட்டிருப்பதையும், அவைகளின் மேல் ரயில்வண்டி போல் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் வண்டிகளையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவ் வண்டிகளுக்கு டிராம் வண்டிகள் என்று பெயர்.

மோட்டார் வண்டிகள் பெட்ரோல் என்னும் ஒரு வகை எண்ணெய்யின் உதவியாலும் புகை வண்டிகள் நீராவியின் உதவியாலும் ஓடுகின்றன? மின்சாரம் என்னும் ஒருவகைச் சக்தியால் அவை ஓடுகின்றன. காற்று எப்படி நமது கண்ணுக்குப் புலப்படாமல் அதன் செய்கையால் மாத்திரம் தெரிகிறதோ, அதுபோல மின்சார சக்தியும் அதன்



டிராம் வண்டி

செய்கையால் மாத்திரம் அறியப்படும். அதை நாம் கண்ணுல் கான முடியாது. ஆனுல், அதன் செய்கையோ மிகவும் அருமையாகவும் ஆச்சரியத்தைத் தரக்கூடியதாகவும் இருக்கிறது. மின்சார சக்தி எங்கும் எல்லாப் பொருள்களிலும் வியாபித்திருக்கிறது. அந்தச் சக்தியை ஒன்றுசேர்த்து, ஒரு

தொடர்ந்த ஓட்டமாக (Current) அமைத்துக் கொண்டு, அதை அநேக வேலைகளுக்கு உபயோகிக்கிறார்கள்.

மின்சார சக்தியை ஆங்கிலத்தில் எலக்டிரிசிட்டி (Electricity) என்று சொல்லுவார்கள். மின்சார சக்தியை உபயோகிக்கின்ற ஒவ்வொரு ஊரிலும் அச் சக்தியை உண்டாக்குவதற்காகத்



தனியாக ஓரிடம் உண்டு. அதை எலக்டிரிக் பவர் ஹவுஸ் (Electric Power-House) என்று ஆங்கிலத்தில் அழைக்கிறோம். அங்கே பல பெரிய இயந்திரங்கள் வேலைசெய்து எலக்டிரிசிட்டியைத் ஏராளமாகத் தயாரிக்கின்றன. அந்தச் சக்தி

பவர் ஹவுசிலிருந்து ஆங்காங்கு ஊர் முழுவதும் இணைக்கப்பட்டிருக்கும் செப்புக் கம்பிகளின் வழியாகச் சதா ஓடிக்கொண்டே இருக்கிறது.

மின்சார சக்தியைக்கொண்டு டிராம் வண்டி எப்படி ஓடுகிறது என்று கவனிப்போம். டிராம் வண்டியின் மேல் ஒரு தடித்த கோல் எலக்டிரிக் கம்பியைத் தொட்டுக்கொண்டிருக்கிறது.

ஏற்கனவே நாம் தெரிந்துகொண்டபடி மின் சார சக்தியானது செப்புக் கம்பிகளின் வழியாக ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தச் சக்தி கோலின் வழியாக டிராம் வண்டியிலுள்ள ஒரு இயந்திரத்தை வேலை செய்யும்படி தூண்டுகிறது. அந்த இயந்திரம் வேலை செய்யும்போது டிராம் வண்டியின் சக்கரங்கள் சுற்றுகின்றன. டிராம் வண்டி ஓடுகிறது. அதை நிறுத்தவும் ஓட்டவும் வேண்டிய வசதிகள் அதில் அமைந்திருக்கின்றன.

எலக்டிரிக் டிராம் வண்டிகள் மிக்க சௌகரியமாகவும் சீக்கிரமாகவும் போகக்கூடியவை.

மின்சார சக்தியைக் கொண்டு பலவித வேலைகள் நடக்கின்றன. எலக்டிரிக் விசிறிகள் வீசுவதும், எலக்டிரிக் விளக்குகள் எரிவதும் இந்த மின்சார சக்தியினாலேதான். நெல் அரைத்தல், மாவு அரைத்தல், நிலக்கடலையைத் தோல் நீக்கல்,

தண்ணீர் இறைத்தல் முதலிய பலவித வேலைகளை யும் இச்சக்தி செய்து வருகிறது.

எலக்டிரிக் கரண்டு அபாயத்தை விளைவிக்கக் கூடியது. கொஞ்சம் அசட்டையாயிருந்தால் உயிருக்கே ஆபத்து வந்துவிடும். இதை உபயோ கிக்கையில் நாம் எப்போதும் வெகு ஜாக்கிரதை யாகவே இருக்கவேண்டும்.

கேள்விகள்:—

(1) டிராம் வண்டி எதனுல் ஓடுகின்றது? (2) மின் சார சக்தியை நாம் எப்படி உணரலாம்? (3) மின்சாரம் எதன் வழியாக ஓடுகிறது? (4) மின்சார சக்தியினுல் டிராம் வண்டி எப்படி ஓடும? (5) மின்சார சக்தியைக்கொண்டு எந்த எந்த வேலைகள் செய்யப்படுகின்றன?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரி யான பதங்களை அமைக்க:—

(1) மின்சாரம் என்பது ஒருவகைச்——(2) மின்சார சக்தி——களின் வழியாக ஓடிக்கொண்டிருக்கிறது. (3) மின் சார சக்தி——விளைவிக்கக்கூடியது. (4) மின்சார சக்திக்கு ஆங்கிலத்தில்——என்று பெயர்.

24. தீபாவளிப் பண்டிகை

ஹிந்துக்கள் கொண்டாடும் அநேக பண்டி கைகளில் மிக முக்கியமானதும் அதிக சந்தோஷத் தைக் கொடுக்கக் கூடியதும் தீபாவளிப் பண்டிகை

யாகும். அவர்கள் ஏன் அதைக் கொண்டாடு கிறார்கள் என்று விசாரிப்போம்.

வெகு காலத்திற்குமுன் நரகாசூரன் என்ற ஒரு அசுரன் அதிகப் பராக்கிரம சாலியாயும் கெட்ட செய்கை யுடையவனாயும் இருந்தான். மிகக்



கொடியவனான் அவன் ஒரு தீவில் தன்னோடு பல ராக்ஷசர்களையும் அசுரர்களையும் சேர்த்துக்கொண்டு ஒரு கோட்டைக்குள். வசித்துவந்தான். அவன் திடீரென்று புறப்பட்டுப் பல நாடுகளுக்குச் சென்று, ஆங்காங்குள்ள குழந்தைகளை யெல்லாம் கொன்றுவிடுவான்; உத்தம ஸ்திரீகளை யெல்லாம் கெடுத்து நாசம் செய்வான்; சாதுக்களை இம்சிப்

பான்; கோவில்களை யெல்லாம் இடித்து விடுவான்; தர்ம காரியங்கள் எல்லாவற்றையும் அழிப்பான்; யாரையும் கொலை செய்வான். பூலோகத்திலுள்ள எல்லா ஜனங்களும் அவனைக் கண்டு நடுநடுங்கினார்கள். அவனுடைய கெட்டசெய்கைகளிலிருந்து தப்பிக்கொள்ள ஏதேனும் வழியுண்டா எனச் சாதுக்கள் யோசித்து நின்றார்கள்; கடைசியாக, அவனை யடக்க மனிதனால் முடியாதென்றும் கடவுள் தான் தகுந்தவர் என்றும் கருதி ஒன்று சேர்ந்து திருமாலைக் குறித்துத்தவம் செய்தார்கள்.

திருமால் தமது தேவியாகிய சத்தியபாமாவோடு கருட வாகனத்திலே தோன்றி, "ஓ சாதுக்களே! உங்களுக்கு ஏற்பட்ட இடுக்கண் என்ன? உங்கள் தவத்துக்கு மெச்சினேன். உங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

சாதுக்கள் திருமாலின் பாத கமலங்களில் விழுந்து நமஸ்கரித்து, "எங்களாண்டவனே! ஆபத்துக் காலத்தில் வந்து ரக்ஷிக்கும் ஐயனே! நாங்களும் இப்பூலோகத்தில் வசிக்கும் சகல ஜனங்களும் நரகாசுரன் என்னும் கொடிய அசுரனது தீயச் செய்கைகளால் வருந்தி நிற்கின்றோம். அவன் செய்யும் தீச்செயல்கள் மிகக் கொடியனவாக இருக்கின்றன. அவனை யடக்கி,

எங்களைக் காப்பதற்குத் தங்களைத் தவிர வேறு யாருமில்லை. தாங்கள் இவ்வுலகத்துக்குப் புல்லு ணவை அளித்துக் காக்கும் அண்ணல் அல்லவா? நாங்கள் யாது செய்வோம்! அபயம்! அபயம்!" என்று தொழுது நின்றார்கள்.

திருமால், 'சாதுக்களே, நீங்கள் கவலைப்பட வேண்டாம். அத் துஷ்டனை இப்பொழுதே சென்று சம்ஹாரம்செய்கிறேன்' என்று சொல்லி நரகாசுரன் இருந்த தீவை நோக்கிச் சென்றார். திருமால் வருவதைக்கண்டு, அத்தீவிலுள்ள பல அரக்கர்களும் அவரை எதிர்த்துப் போர்புரிந்து மாண்டார்கள். கடைசியில், நரகாசுரன் திருமாலு க்கு நேராக வந்து நின்று சரமாரியாகப் பாணங் களை விடுத்தான். திருமாலின் சக்தியினால் அப் பாணங்கள் அவரை ஒன்றும் செய்யவில்லை. நாராயணன் தம் கையிலிருந்த சக்கராயுதத்தால் நரகாசுரனின் தலையை வெட்டினார்.

நரகாசுரன் முற்பிறப்பில் சத்தியபாமையின் புதல்வன். அதனால், அவன் இறக்குந் தறுவாயில் திருமாலின் பெருமையை உணர்ந்தான்; "ஐயனே! நான் செய்த அக்கிரமச் செய்கைகளுக்கு என்னைத் தண்டித்தீர். என்றாலும், உலகத்தார் நான் செய்த தீமைகளை மறந்து என்னை நிந்திக்காதிரு

க்க எனக்கு ஒரு வரம் தந்தருள வேண்டும்'' என்று கெஞ்சினான்.

திருமாலும் மனமிரங்கி, "நரகாசுரா! உனக்கு இப்போது நற்புத்தி வந்ததற்கு மெச்சினேன். நீ முக்தி அடையக் கடவாய். நீ கேட்ட வரத்தையும் கொடுப்பேன்'' என்றார். நரகாசுரன் "பிரபுவே! நான் இறக்கும் இவ்வேளையில் பிரதி வருஷத்திலும் எல்லா ஜனங்களும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து, புதிய வஸ்திரங்களை உடுத்தி, உண்டு களித்திருக்க வேண்டும். அவர்களுக்கு கங்காஸ்நானம் செய்த பலனைத் தாங்கள் அளிக்க வேண்டும்'' எனக் கேட்டான். திருமாலும் அவனுக்கு அவ்வாறே வரம் தந்தருளினார்.

ஆகையால்தான் ஒவ்வொரு வருஷத்திலும் ஐப்பசி மாதம் அமர பக்ஷம் சதுர்த்தசி திதியன்று இரவில் சுமார் நான்கு மணிக்கு எல்லோரும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்கிறார்கள்; புது வஸ்திரங்களைத் தரித்துத் திருமாலைக் குறித்து வணங்கிவிட்டுத் தின்பண்டங்களைச் சாப்பிட்டுச் சந்தோஷமாக இருக்கிறார்கள். சிறுவர்களும் சிறுமிகளும் வேடிக்கையாகப் பட்டாசுக் கட்டுகளையும் மத்தாப்பு முதலியவைகளையும் கொளுத்தி விளையாடுகிறார்கள். அது, நரகாசுரனும் திருமாலும் போர் புரிந்த காலத்தில் போடப்பட்ட பாணங்களைப்போல் இருக்கிறது என்று வேடிக்கையாகச் சிலர் சொல்வதுண்டு.

கேள்விகள் :—

(1) தீபாவளிப் பண்டிகையை நாம் எதற்காகக் கொண்டாடுகிறோம்? (2) அசுரனால் துன்பமடைந்த ஜனங்கள் யாருடைய உதவியை வேண்டினார்கள்? (3) திருமால் என் நரகாசுரனைக் கொன்றார்? எப்படிக் கொன்றார்? (4) நரகாசுரன் மரண காலத்தில் திருமாலிடம் என்ன வேண்டினான்? (5) நாம் தீபாவளிப்பண்டிகையை எப்படிக் கொண்டாடுகிறோம்?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க :—

(1) திருமால் தனது தேவியாகிய —— வோடு —— வாகனத்திலே தோன்றினார். (2) தீபாவளிப பண்டிகையை

ஒவ்வொரு வருஷத்திலும் —— மாதம் —— பக்ஷம் —— திதி —— யன்று கொண்டாடுகிறோம். (3) சிறுவர்களும் சிறுமிகளும் திருமாலை —— விட்டு —— சாப்பிடுகிறார்கள்.



25. மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தம்

சங்கர சங்கர சம்போ—சிவ
சங்கர சங்கர சங்கர சம்போ.

1. சுப்பனென் றோர்பைய னிருந்தான்-அவன்
சுட்டிப் பயலாகக் குறும்புகள் செய்தான்.
நாய்கள் மேற் கற்களை யெறிந்தான்—நல்ல
பட்சி களைப் பிடித் தேவதை செய்தான். (சுப்)

2. சுப்பன் பிதா அதைக் கண்டார்—மகனைக் [னார்.
கிட்ட அழைத்தேநல் வார்த்தையைச் சொன்
சுப்பன் அதைச் சற்றுங் கேளான்—அவன்
கொண்டதே கோலமென் றலைந்தே திரிந்தான்.
(சுப்)

3. மாதா பிதா குரு வார்த்தை—தனைக்
கேளா தவனுகிக் கெட்டலைந் தானே.
யாவரு மேமனம் நொந்தார்—அவனுக்
கூராரே புத்தி புகட்டட்டு மென்றார். (சுப்)

4. ஒருநாளோர் கழுதையைக் கண்டான்—மிக்க
குறும்புகள் செய்யவே மனதினிற் கொண்டான்.
வாலிற் பனைபோலே கட்டி—அதில்
ஏறிச் சவாரிசெய் தேசத்தம் செய்தான். (சுப்)

5. சத்தத்தைக் கேட்டுமே கழுதை—மருண்டு
தாறு மாறுகவே முள்வழி யோட
மெத்தப் பயந்தானே சிறுவன்—கழுதை
மேல் தா னிருப்பதை மறந்தே விழுந்தான்.
(சுப்)

6. முட்களும் தைத்தன வுடம்பில்—மேலும்
தேகத்தில் பல பல காயமுண் டாச்சு.
மிக்க வருத்தமாய் நின்றான்—இதை
வேகத்தில் வந்த தன் தந்தையுங்கண்டார். (சுப்)

7. வெட்கத் துடன் மைந்தன் நின்ருன்—இப்போ
நற்புத்தி வந்ததோ வென்ருரே தந்தை.
பக்கத்தில் வந்தானே சுப்பன்—என் தன்
மிக்க பிழையைப் பொறுப்பீரே யென்ருன்.(சுப்)

8. தந்தையும் மன்னிப்புச் செய்தார்—சுப்பன்
சரீரத் திற்கே சிகிச்சையும் செய்தார்.
அந்த நாள் முதலாகச் சுப்பன்—மிக
அன்புள்ள நற்பையனு ஞனே, கேளீர். (சுப்)

கேள்விகள் :—

(1) மூத்தோர்சொல் தவருமல் நடக்க வேண்டுமென்று சுப்பன் எப்படித் தெரிந்து கொண்டான் ?

---

26. பயிர்த்தொழில்

நமது தேசமாகிய இந்தியாவில் பெரும்பாலான மக்கள் நிலத்தை உழுது பயிரிட்டு ஜீவனம் செய்து வருகிருர்கள். பிற தொழில்களைக் காட்டிலும் உழுதுண்டு வாழ்வதே மேலானது. “உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை” என்ற ஆன்ருேர் வாக்கும் உண்டு.

நாம் சாப்பிடும் ஆகாரத்துக்கான தான்யங்களையும் காய் கறிகளையும் குடியானவர்கள் நிலத்தை உழுது பயிரிட்டுத் தயார் செய்ய வேண்டியிருக்கிறது. குடியானவன் சாமர்த்தியமாக நிலத்

தை உழுது சீர்படுத்திப் பயிரிடுவானுனல் அவனுக்கு ஏராளமான லாபம் கிடைக்கும். ஒரு தான்யத்தை நிலத்தில் விதைத்துப் பாதுகாத்து வந்தால், அதுபல தான்யங்களாக விர்த்தியாகின்றது. ஆகவே, அக் குடியானவன் தன்னையும் தன் குடும்பத்தாரையும் காப்பாற்றிக் கொள்வதோடு பிறரையும் காப்பாற்றுகிருன்.

குடியானவர்கள் நன்செய், புன்செய் முதலிய இடங்களில் பல வித தான்யங்களையும், காய் கறிகளையும் பயிரிடுகிருர்கள். கோதுமை, வரகு, கம்பு, கேழ்வரகு, உளுந்து, பயறு, சோளம், கடலை, எள், கொள், மொச்சை முதலிய பல தான்யங்களும் எல்லாவித காய்கறிகளும் புன்செயிலேயே சாதாரணமாகப் பயிர் செய்யப் படுகின்றன. பெரும்பாலும் நெல் நன்செயிலேயே விளைகின்றது. ஆயினும், சொற்ப மழை பெய்யும் இடங்களில் புன்செயிலும் கொஞ்சம் நெல் விளையும்.

தான்யங்கள் பலவற்றுள்ளும் முக்கியமாய் நமது சாப்பாட்டுக்கு உபயோகப்படுவது நெல். இது நீர்ப்பாசனப் பிரதேசங்களில்தான் ஏராளமாய் விளைகிறது. நெல் பயிரிடுவது எப்படி?

குடியானவர்கள் ஒரு வயலை நன்ருக உழுது புழுதியாக்கி, அதில்எருக்களைக் கொட்டி,ஜலத்தை

விட்டுக் குழப்பிச் சேருக்குவார்கள்; மேடுபள்ளமில்லாமல் சமமாகச் செய்வதற்கு ஒரு பலகையைப் போட்டு அதன்மேல் பாரத்தைவைத்து இழுப்பார்கள். அதைத்தான் பரம்படித்தல் என்று சொல்லுவார்கள் ; தண்ணீரில் ஏற்கனவே ஊறவைத்த நெல்விதைகளைக் கொணர்ந்து இதில் விதைத்து விடுவார்கள்; விதைகள் அழுந்தினவுடன் அவ்வயலிலுள்ள நீரை வடிக்கட்டி விடுவார்கள். நெல் விதைகள் முளைத்து மேலே வரும். பிறகு அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய்த் தண்ணீரும் பாய்ச்சுவார்கள். இந்த இளம் பயிர்களுக்கு நாற்றுக்கள் என்றும், அவை பயிரிடப்படும் வயலுக்கு நாற்றங்கால் என்றும் பெயர். நாற்று பக்குவமடைந்தவுடன், ஆட்கள் நாற்றங்காலில் இறங்கி நாற்றுக்களைப் பிடுங்கிச் சிறு சிறு முடிகளாக முடிந்து போடுவார்கள்; பல முடிகளை ஒன்று சேர்த்து ஒரு கட்டாகக் கட்டித் தலையில் தூக்கிக்கொண்டு வேறு வயல்களுக்குக் கொண்டு போவார்கள்.

அவ்வயல் தண்ணீர் பாய்ச்சினபின் பல தடவைகள் உழப்பட்டு நன்குய்ச் சேருக்கப்பட்டிருக்கும். அங்கே பெண்டிர்கள் நின்று கொண்டு நாற்று முடிகளைப் பிரித்துச் சுமார் நாலைந்து அலகுகள் கொண்ட ஒரு பிடியாகப் பூமியில் நடுவார்கள்; இவ்விதமாக நடவு நட்டு முடிந்தவுடன் அடிக்கடி

தண்ணீர் பாய்ச்சி வருவார்கள். பயிர்கள் நன்ருக வளர்ந்து கதிர்கள் விடும். கதிர்கள் நன்ருக முற்றினவுடன், ஆடவர்களும் பெண்டிர்களும் வயல்களில் இறங்கிப் பயிர்களை அடித் தாளுடன் அறுத்துச் சிறு குப்பல்களாகப் போடுவார்கள். ஒரு குப்பலுக்கு ஓர் அரி என்று பெயர். வயல் முழுவதும் அறுத்தானவுடன், ஆட்கள் பல அரி களைக் சேர்த்துக் கட்டின கட்டுகளைக் களத்திற் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள். ஒரு திடலில் சுத்தம் செய்யப்பட்ட இடத்துக்குக் களம் என்று பெயர். அவர்கள் களத்திலே கட்டுகளைப் பிரித்துக் கைக்கு வந்தவரையில் எடுத்துப் பூமியின் மீது அடிப்பார்கள். நெல் உதிர்ந்துவிடும். பிறகு ஆட்கள் வைக்கோலைப் போராகக் குவித்துவிடுவார்கள்; காற்றில் தூற்றிப்பதரைப் போக்கி விட்டு, நெல்லை அளந்து சாக்குகளில் கட்டி வீட்டிற்குக் கொண்டுபோவார்கள். அந்த நெல்லை நாம் நன்ருய்க் காய வைத்துக் குற்றி, அரிசியாக்கிச் சமைத்துச் சாப்பிடுகிருேம்.

(1)பயிர்த்தொழிலின் பெருமையைக் காட்ட ஆன்ருேர் கூறியுள்ள வாக்கு என்ன? (2) புன்செயில் சாதாரணமாய் விளையும் தான்யங்கள் யாவை ? (3) நெல் எப்படிப் பயிரிடப் படுகிறது? (4) களத்தில் நெல் சேகரிக்கும் விதம் எப்படி ?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

(1) நெல்——பிரதேசங்களில்—விளைகிறது. (2) இளம் பயிர்களுக்கு——என்றும், இந்த வயலுக்கு——என்றும் பெயர். (3) பயிர்கள் நன்ருக வளர்ந்து——விடும். (4) நெற் பயிர்களை அறுத்துக்கட்டின கட்டுக்களைக்—கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். (5) நாம் நெல்லை நன்ருகக் காயவைத்துக் குற்றி——யாக்கி அதைச்——சாப்பிடுகிருேம்.

---

27. இராமதாசர்

முன்ெருரு காலத்தில் நமது நாட்டில் கோபன்ன என்ற ஒரு பெரியார் இருந்தார். அவர் திருமாலின் அவதாரமான இராமபிரானை எப்போதும் நினைத்து அவரையே துதித்துக்கொண்டிருந்தார். அவர் மிகவும் நற்குண நற்செய்கைகளோடு கூடினவராகையால், அவருடைய கீர்த்தியைக் கேள்வியுற்ற தானேஷா என்ற ஒரு முகம்மதியச் சக்கரவர்த்தி தம் தாலுகாக்களில் ஒன்றில் அவரை ஒரு தாசில்தாராக நியமித்தார். கோபன்னவும் தம்முடைய கடமைகளைச் சரிவரச் செய்துவந்தார்.

இராமபிரானின் கிருபையால் இப்பதவி தமக்குக் கிடைத்தது என அவர் மகிழ்ந்தார்; எப்போதும் இராம பஜனை செய்தார்; இராமனுக்கு ஆராதனைகளைச் செய்தார்; சாதுக்களையெல்லாம் கூட்டங்கூட்டமாக வரவழைத்து அன்னதானம் முதலியவைகளைச் செய்தார்;

யாவராயிருந்தாலும் இராம பக்தன் என்று சொன்னால் அவர் அவனுக்குத் தம்மால் முடிந்த வரை உதவிகளையும் செய்துவந்தார்.

அவர் இராமபிரானிடம் பக்தி செலுத்தியதால், இராமதாசர் என்று அழைக்கப்பட்டார். தாசில்தாராகிய இராமதாஸர் தம்முடைய தாலுகாவில் உள்ள எல்லாக் கிராமங்களையும் பார்வையிட்டு வருங்காலத்தில், ஒரு நாள் ஓரிடத்தில் ஒரு கோவில் பாழடைந்து கிடந்ததைக் கண்டார்; அக்கோவிலில் இராமபிரானின் உருவச் சிலை ஒன்று கவனிப்பார் யாருமின்றிக் கிடந்ததையும் கண்டார்; அந்தக் கோவிலின் பரிதாப நிலைமையைக் கண்டு வருந்தினார். உடனே அவர் அதைத் தாமே கட்டி முடிக்க எண்ணினார்; தம்மிடமிருந்த பொருள் முழுவதையும் செலவு செய்து கோயிலைக் கட்ட ஆரம்பித்தார். திருப்பணிக்குப் பொருள் இன்னும் அதிகம் வேண்டியிருந்ததால், அவர் கஜானாப் பணம் முகம்மதிய பாதுஷாவுக்குச் சொந்தம் என்பதையும், அவரது அனுமதியில்லாமல் தாம் அதைச் செலவு செய்யக் கூடாது என்பதையும் முற்றிலும் மறந்துவிட்டார். அதற்கு அவரது இராம பக்தியே காரணமாகும். அவர் இராமஸ்வாமி கோயிலைக் கட்டி முடித்துத் தினந் தோறும் பூஜை, நைவேத்தியம் முதலானவை நடக்குமாறு

திட்டம் செய்தார்; திருமாலின் பக்தர்களுக்கு அன்னம் ஏராளமாக அளித்துச் சந்தோஷமாய்க் காலங்கழித்து வந்தார்.

தமக்குச் செலுத்தவேண்டிய சர்க்கார்ப்பணம் செல்லாகாமல் நின்றதைக் கண்ட தானேஷா, தம் ஆட்களை அனுப்பி விசாரித்து விஷயங்களை



அறிந்தார். அப் பாதுஷா தம் பணம் வீணகச் செலவு செய்யப்பட்டதாகக் கருதினர். அவருக்குக் கோபாக்கினி பொங்கிற்று. ஆகையால், அவர் தம்முடைய வீரர்களை அழைத்துப் பத்திராசலம் சென்று இராமதாசரை விலங்கிட்டுக் கொண்டு வரும்படிஉத்தரவிட்டார். அவ்வண்ணமே தூதர்

கள் சென்ருர்கள். இராமதாசர் இராம பூஜை செய்து கொண்டிருக்கையில், தூதர்கள் சென்று பாதுஷாவின் கட்டளையை அவரிடம் தெரிவித்தார்கள்.



இதைக் கேட்ட இராமதாசர் திடுக்கிட்டுத் திகைத்து நின்ருர் ; ஒன்றும் சொல்ல வழி தெரியாமல் அடியற்ற மரம்போல் கீழே விழுந்தார்; கொஞ்ச நேரம் சென்று எழுந்து இராமபிரானைக் குறித்துப் பூஜை செய்தபின், தூதர்களின் பின் சென்ருர். அவர்கள் இராமதாசரின் கையில் விலங்கிட்டு, அவரைத் தானேஷாவின் முன் கொண்டு

போய் நிறுத்தினார்கள். தானேஷா செலவுசெய்யப் பட்ட தம் பணத்தைத் திரும்பக் கொடுக்கும்படிக் கடுங் கோபத்துடன் சொன்னார். இராமதாசர் இராமபிரானைத் துதி செய்தாரேயன்றி யாதொரு மறுமொழியும் கூறவில்லை.

தானேஷா இராமதாசரைச் சிறையிலடைத்து இம்சைசெய்தார். இராமதாசர் அடைந்த கஷ்டத்துக்கு அளவேயில்லை.

தம் பக்தன் படும் துன்பத்தைச் சகிக்க மாட்டாத இராமபிரான் தம் தம்பி இலக்ஷ்மணருடன் புறப்பட்டார்; இராமதாசரின் தூதர்களாக வேடம் தரித்துக்கொண்டு, தானேஷா முன் தோன்றினார்; தானேஷாவுக்குச் சேரவேண்டிய திரவியம் முழுவதையும் செலுத்தினார். பாதுஷா ஆச்சரிய முற்றார்; இராமதாசரின் பக்திக்கு மெச்சினார்; அவரைச்சிறையினின்றும் விடுவித்தார். இராமபிரான் சீதாதேவியோடுபிரசன்னமாகி, இராமதாசருக்கும் தானேஷாவுக்கும் காக்ஷி கொடுத்தருளினார்

கேள்விகள்:—

(1) தானேஷா கோபன்னாவுக்கு என்ன உத்யோகம் கொடுத்தார்? (2) கோபன்னாவுடைய முக்கிய குணம் யாது? (3) அவர் தாசில்தாராக இருக்கையில் பணத்தை எவ்வாறு செலவிட்டார்? (4) தானேஷா கோபன்னாவை ஏன் தண்டிக்க எண்ணினார்? (5) இராமபிரான் கோபன்னாவை

எவ்வாறு காப்பாற்றினார்? (6) கோபன்னாவுக்கு ஏன் இராம தாசர் என்ற பெயர் வந்தது?

கீழ்க்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான பதங்களை அமைக்க:—

1. கோபன்னா காஜானாவிலிருந்த பணத்தைக்கொண்டு ——கட்டினார். 2. அதற்குக் காரணம்——யாகும். 3. தூதர்கள்——விலங்கிட்டு——முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள். 4. இராமபிரான்——யோடு பிரசன்னமாகி இராமதாசருக்கும்——வுக்கும்——கொடுத்தார்.

---

1. வெற்றிவேற்கை

(அதிவீரராமர்)

1. எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்.
5. மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.
6. வணிகர்க் கழகு வளர்பொரு ளீட்டல்.
7. உழவர்க் கழகே ருழு தூண் விரும்பல்.
8. மந்திரிக் கழகு வரும் பொரு ளுரைத்தல்.
9. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்
10. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.
11. குலமகட் கழகு தன் கொழுநனைப் பேணுதல்.
12. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
13. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.
14. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
17. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
22. பெரியோரெல்லாம் பெரியரு மல்லர்.
23. சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.
24. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.

25. உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்.
26. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
27. சுடினுஞ் செம்பொன் தன்னொளி கெடாது.
28. அரைக்கினுஞ் சந்தனம் தன்மணம் அறாது.
29. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
30. கலக்கினும் தண்கடல் சேறாகாது.
31. ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
33. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை.
நீர்க்குட் பாசிபோல் வேர்க் கொள்ளாதே.
35. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.
36. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.
38. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்.
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.
40. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.
42. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதராகும்மே.
44. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பர்.
46. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.
47. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
48. குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவார்.
50. சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினு மடைவர்.

52. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினு மாளுவர்.

54. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினு மழிவர்.

56. இல்லோ ரிரப்பது மியல்பே யியல்பே.

57. இரந்தோர்க் கீவது முடையோர் கடனே.

58. கொடுங்கோல் மன்னர் வாழு நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே.

60. சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்றோர் குறவர் தேயம் நன்றே.

62. வித்து மேரு முளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கு மேழையும் பதரே.

64. தன்னாயுதமும் தன் கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

66. வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்
பொய்யுடையொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.
மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

72. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

73. புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.

74. வழியே ஏகுக வழியே மீளுக.

75. வாழிய நலனே வாழிய நலனே.

---

2. நீதிவெண்பா

1. வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான்.

2. துர்ச்சனரும் பாம்புந் துலையொக் கினும்பாம்பு
துர்ச்சனரை ஒக்குமோ தோகையே—துர்ச்சனர்தாம்
எந்த விதத்தாலு மிணங்காரே பாம்புமணி
மந்திரத்தா லாமே வசம்.

3. கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கர்ப்பூர மாமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல்.

4. பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பெற்றதிலோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததனால் ஏதுபயன்
ஒன் றமையா தோகரிக்கன் றேது.

5. பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம்பட வருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து.

6. தீயவர்பால் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
தூயவரென் றெண்ணியே துன்னற்க—சேயிழையே
தண்ணொளிய மாணிக்கம் சர்ப்பம் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை நாடு.

7. உத்தமர்தாம் ஈயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாம் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வர் அதமர் அவர்களே
தேங்கதலி யும்போல்வார் தேர்ந்து.

8. கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழ்கினுநூல்
வல்லா னொருவனையே மானுவரோ—அல்லாரும்
எண்ணிலா வான்மீ னிலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு.

---

3. நல்வழி

ஔவையார்

1. புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்-எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்.

2. சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

3. வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமி னென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

4. ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாந்—தேட்ட
மரியாதை காணு மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணுந் தனம்.

5. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராயினும்
இல்லையென மாட்டா ரிசைந்து.

6. ஒருநா ளுணவை யொழியென்ரு லொழியாய்
இருநாளுக் கேலென்ரு லேலாய்—ஒருநாளும்
என்னே வறியா இடும்பைகூ ரென்வயிறே
உன்னேடு வாழ்த லரிது.

7. ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேருேர் பணிக்கு.

8. செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ விருநிதியும்—வையத்
தறும்பாவ மென்ன வறிந்தன் றிடார்க்கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்.

9. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.

10. நீரில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ்—மாறில்
உடன்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை.

11. ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்ருகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல்.

12. கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்
செல்லா தவன்வாயிற் சொல். [டாள்

4. பஞ்ச தந்திரம்

மார்த்தாண்ட தேவர்

1. துளசா புரத்தில் நால்வர்ஒரு
தொடர்பாய்க் கல்வி பயின்றோர்கள்
வளமார் அவரின் ஒருமூவர்
மந்தி ரத்தின் மிக்கமையால்
தளமார் அரசன் தனைக்கண்டு
தங்கள் வித்தைத் திறங்காட்டி
ஒளியார் தனங்கள் மிகஈட்டற்
குன்னித் தம்முள் கூறுவார்.

2. இவன்தான் மிக்க கல்வியிலன்
எனினும் நம்மோ டிருந்துபடித்
தவனுதலின் நாம் ஒருபங்கு
தருவோம் என்றங் குடனழைத்துப்
புவியாள் அரச னிடைப்போகும்
போதில் அந்த வழியினிடைச்
சவமாம் சிங்கம் தனைக்கண்டு
தம்மந் திரம்சோ திக்கவெண்ணி.

3. கற்ற வித்தையால் செத்த
கண்டீரவத்தை எழுப்புவேன்
மற்றை யவற்குச் சம்மதமோ
என்ன மந்திரம் தெரியா
துற்ற ஒருவன் எழுப்பில் அது
கொல்லும் என்ன உரைத்திடலும்
பற்றி அவனைத் தள்ள அவன்
பயந்தோர் மரத்தில் ஏறினன்.

4. எழுப்பி னார்பின் பதுகொல்ல
இறந்தா ரம்மூ வரும் இதனால்
இழுக்கி லாத கல்வியினும்
அறிவே பெரிதென்பார் பெரியோர்.

SRI VIDYA POWER PRESS, KUMBAKONAM.